ஏடுபெயர் - வைத்தியம் பாதிரட்டு.

எண் - 69/வை. பலவகை ./.

11.4.86

22/3/99

வைத்தியம் பொதிரட்டு.

ஏட்டின் பெயர் - வைத்தியம் பலதிரட்டு

ஏட்டின் எண் - 69./வை-பலவகை.11.

~~[illegible]~~ எடுத்தெழுதியவர் - க.வஸிரா.

ஆரம்ப தேதி - 1.4.86

முடிந்த தேதி. ~~15.4.86.~~ 11.4.86.

மொத்தபக்கங்கள் - 85

1.4.86

வைத்தியம் பலதிரட்டு

சொரவாதங்களுக்கு எண்ணெய்.

சித்தாமணக் கெண்ணெய், வெள்ளுள்ளி, சித்தாமணக்கம் வேர், நாரணை வேர், முக்கரட்டை-வேர், நன்னாரி வேர், மாவிலங்கை வேர், இலந்தைப் பட்டை, இலந்தைக் கொட்டை, கொள்ளு, சுக்கு இவை எல்லாம் போட்டுத் தண்ணீர் வார்த்து நாலிலொன்றாய்க் காய்ச்சி,

சிற்றாமணக் கெண்ணெய் - 3 உழக்கு (6 ஆழாக்கு)

கள்ளிப்பால் - 1 ஆழாக்கு)

கூட்டி இறக்கவும்.

திரிகடுகு, செவியம், அரேணுகம், ஏலம், அசமதாகம், வெட்பாலை அரிசி, சிற்றேலம், சீரகம், கடுகு, பெருமரத்துப்பட்டை, சிறுதேக்கு, மரமஞ்சள், விளாவரிசி, கரு-வேப்பந்தண்டு, இந்துப்பு, அஷ்டபாகம், உப்பு, அட்டுப்பு, இவை ஒவ்வொன்றும் ஒரு கழஞ்சு அரைத்துக் கரைத்து, வகை வைத்துக் கொண்டு உள்ளுக்குக் கா[illegible] கொள்ளை வாதம், குன்ம நோவை, வயிற்று வாய்வு இவை எல்லாந் தீரும்.

புளி விடவும்.

பித்தத்திற்கு நூக்குக்கு அமிர்தாதி எண்ணெய்.

சீந்திக்கொடி இலை - 10.
முத்தக் காசு — 10
நன்னாரி வேர் 10
(இலா) எலுமிச்சம் வேர் - 1
வெட்டி வேர் - 1

இவைகளை இடித்து இருதூணி நீரிற்போட்டு குறுணியாய்க் காய்ச்சிப் பிழிந்து வடித்து

ஏலரிசி, இலவங்கப்பட்டை, அதிமதுரம், பச்சிலை, சாதிக்காய், அதாவரிசி, கண்டில்வெண்ணெய், கடுகுரோகிணி, நெய்தல்க்கிழங்கு நறும்பிசின், அடவிக் கச்சோலம், செண்பகப்பூ முத்தக்காசு, மஞ்சிட்டி இவை தன்னி முப்பது களஞ்சு அரைத்து நல்லெண்ணை -4 பால் -4 கூட்டிப் பதத்தில் வடித்து புகை கூட்டிக் கலந்து தலையில் நனைக்கவும்.

தீரும் வியாதி:- பித்தவகை யனைத்தும், உடம்பிலுள்ள உஷ்ணமும், மகாபாத அந்திரதாகம் எண்ணப்பட்ட ரோகம், இரத்தபித்தம் இவை எல்லாந் தீரும்.

பித்தம், தலைவலி, தலை நோவுக்கு:
கத்தாழை எண்ணெய்.

கற்றாழையைச் சோறு வாங்கி அந்தச் சோற்றில் அத்திப்பட்டை துவைத்துப் போட்டு கட்டிப் பிசறி வெய்யிலில் வைக்கத் தண்ணீர் விடும். அந்தத் தண்ணீரை வடித்து, அந்தத் தண்ணீர் ஏடமரியாதியதிலே கலந்து, ஆவின் பால் - இளநீர் நாநாழி விட்டுக் கலந்து இதில் கலக்கவும் சாதிக்காய், மாஞ்சில், அகில், சந்தனம், இருவேலி, இலாமிச்சம், திப்பிலி, நெல்லிமுள்ளி, தாமரை-வளையம், செங்கழுநீர்க் கிழங்கு, கொட்டிக்-கிழங்கு.

இது நாழிக்கு விராகனிடை கட்டி ஏழொன்று பாலில் அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்துத் தலையில் நனைக்கவும்.

4. எப்பேர்ப்பட்ட இருமலுக்கும் மருந்து.

ஆதண்டந் தழை - துட்டிடை - 1
நெற்பொரி - துட்டிடை - 1
மிளகு - துட்டிடை - 2

இவை எல்லாம் இளம் வறுப்பாய் பொன்னி-றமாய்ச் சூரணித்து வஸ்த்திரகாயம் செய்து-கொண்டு கொம்புத் தேனில் குழைத்து இரண்டு நேரமும் சாப்பிட இருமல் நிற்கும்.

5. சூதக வயிற்றுவலி, வாய்வு, இழுத்துப்
பிடித்தலுக்கு எண்ணெய்.

விளக்கெண்ணெய் — படி - 1
வெள்ளை வெங்காயம் பலம் - 1/2
சீரகம் பொடி செய்தது — பலம் - 1/4

இவைகளெல்லாம் சேர்த்துக் கொடுக்கவும்.
த்துவலி, சூதக வாய்வு, வயிறு இழுத்துப்
த்தாலும் தீரும்.

6. சூதக வாய்வுக்கு ஒரு நேரம்

தே. ஐந்து வெங்காயம் நெய்யில் வறுத்து
மூன்று நாட்கள் சாப்பிடவும். சூதக வாய்வு
தீரும்.

7. கண் சிவப்புக்குத் துளசி எண்ணெய்.

நல்லெண்ணெயில், துளசிச்சாறு, நல்ல சீரகம்
கூட்டி தைல எண்ணை பண்ணி தலை நனைத்து
முழுகவும். கண் சிவப்புத் தீரும்.

8. மந்தார காசம், மேல் சுவாசம், கோழை இளைப்பு
இவைக்கு எண்ணெய்.

ஆடாதொடை, கண்டங்காலி, கையாந்தகரை
தூதுவளை, குப்பைமேனி, கொளக்கடை,
பொருங்பின், நிராமுட்டைக்கி, சுக்கு,

...வழுதலை, இன்பூரல், நாய்ப்பாகல் கோவை-
...வைச்சாறு ஒரொன்று நாழி. இதில் திப்பிலி
...கிராம், இலவங்கம், கற்கடகசிங்கி, சிறு-
தேக்கு, இந்துப்பு, அதிவிடயம், அதிமதுரம்,
தேவதாரம், அக்கு, சவுக்காரம், சவச்சீகை,
சீரகம், கோஷ்டம் (இவை) படிக்குக் கழஞ்சு
இவை பாலில் அரைத்துக் கலந்து நல்லெண்ணெய்
வேண்டியது விட்டுப் பதத்தில் வடித்து தினம்
ஒரு காசிடை கொள்ளவும்.

தீரும் வியாதிகள்:- மந்தாரகாசம், மென்ச்சுவாசம், கோழை, இளை இவை தீரும்.

9. கர்ப்பிணிப் பெண்களின் இளைக்கு எண்ணெய்.

விளக்கெண்ணெய்	1 படி	
பரங்கிப்பட்டை	1 படி	
கருஞ்சீரகம்	5	வராகனிடை
நற்சீரகம்	5	"
சாரம்பூ	5	
திப்பிலிமூலம்	5	"
கொப்பனைக் கிழங்கு	5	"
பனையரணைக் கிழங்கு	5	"
சாரணைவேர்	5	"
ஏரவெங்காயம்	படி	

வேரை தோலித்துக் கொண்டு பரங்கிப்பட்டையை சிறுக சிறுக நறுக்கி, எண்ணெய் கொதிவரவிட்டு, ஏரவெங்காயத்தை இரண்டாக்க் கீறித்து கொதிக்கும் எண்ணெயில் போடவும்.

ஈ.ர வெங்காயம் வெந்து தூளி எல்லாம்
மெதுவான போதில் இறக்கிக் கொண்டு, அதில்
கடைச் சரக்கு பரங்கிப் பட்டை கூடப்-
போட்டு இறக்கி ஏழு மாதத்தில் 30 நாட்கள்
உட்கொள்ளவும். ஒவ்வொரு காண்டி
உட்கொள்ளவும்.

பத்தியம்:- அகத்திக்காய், பசு நெய்,
ஈ.ர வெங்காயம், நச்சுப்புக் கூட்டவும்,
மங்கு சோறாவது, புழுங்கல் அரிசியாவது
கூட்டவும். வீக்கம் முதலானதும் போம்.

~~10. கபால சன்னிக்கு எண்ணெய்.~~
~~கத்தாளைச் சாறு, ஈ.ர வெங்காயம், இவைகளை~~
~~விளக்கெண்~~

10. கபால சன்னிக்கு எண்ணெய்
ஈ.ர வெங்காயத்தை விளக்கெண்ணெயில்
கிள்ளிப் போட்டு கத்தாளைச் சாறு விட்டு
சூரியபுடம் வைத்து இதைவறளச் செய்து
காதுக்கு விடவும்.

பத்தியம்:- புளி, கிரந்திப் பண்டம்
கூட்டாமலிருக்கவும்.

கபாலச் சன்னி தீரும்.

11. கிராணிக்கு அருளாதி எண்ணெய்

பெருமரப்பட்டை — 10
கிடச்சிப்பாலைப்பட்டை — 10

இவை யிரண்டையும் இடித்து இருநாழித் தண்ணீரிலிட்டு எட்டொன்றாக்கி வடித்த இதில் நல்லெண்ணெய் படி-1, தயிர் படி-1 இவைகளைக் கலந்து, இதுக்கு வெள்ளை வெங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, அசமதாகம், கருஞ்சீரகம், கிராம்பு இது வகைக்கு பலம்-1 சேர்த்து சூரணம் செய்து எண்ணெயில் போட்டு மெழுகு பதத்திலிறக்கவும். ஒருநேரத்திற்கு ஒரு கரண்டி, கற்கத்துடன் இரண்டு நேரமுங் கொள்ளவும். ஆறுவகை மூலமும் கிராணியுந் தீரும்.

12. அஷ்ட கிராணிக்கு அருளாதி எண்ணெய்.

பெருமரத்துப் பட்டை — 50 பலம்
அத்திப் பட்டை — 10 "
நாவல்ப் பட்டை — 10 "

இது தனைத்து இருதூணி நீர்விட்டு எட்டி-லொன்றாய்க் காய்ச்சி, இதில் நல்லெண்ணெய் ஒருபடி விட்டு துஞ்சாவிக் காய்ச்சி இதுக்கு கற்கம், சுக்கு, அசமோதாகம், கிராம்பு, சாதிக்காய், வெள்ளிலோத்திரம், அதிவிடையம்,

இலவம் பிசின், விளாம் பிசின், வில்வப் பிசின்
வை ஒவ்வொன்றும் இரு கழஞ்சு எடுத்
தரைத்துக் கரைத்துப் பதத்திலிறக்கவும்.
காக்கத்துடனே ஒரு கரண்டி கொண்டு வரவும்.

14. இதுக்கு அஷ்ட கிராணியும் என்னல
முதலான வயிற்று வியாதியுந் தீரும்.

13. ரணை வாத சன்னிக்குக் கிராணி எண்ணெய்.

புங்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்-
-பெண்ணெய், நல்லெண்ணெய், விளக்கெண்-
-ணெய், சுவரிக்கொற்று வேர், அமுக்கிரா வேர்,
மிளகரணை வேர், கொளிஞ்சி வேர்,
பண்ணைத்து வேர், அவரி வேர், தூநாய் வேர்,
பாகல் வேர், ஊமத்தம் வேர், நாரத்தம் வேர்,
பூனைக்காட்சி வேர், இடாக்குறும்பை,
முசுறுமொட்டை, பச்சைப் பாம்பு, நல்ல-
-பாம்புக் கண்டம், அரத்தை, மஞ்சள்,
ஆதகரப் பண்பட்டை, அத்தித் திப்பிலி, திப்பிலி-
-மூலம், சிறு தேக்கு, சிவனார் வேம்பு, வலம்
புரிக்காய், கிராம்பு, சுக்கு, திப்பிலி, வெள்ளை-
-வெங்காயம், பெருங்காயம், இரண்டு காசிடை
வசம்பு. ஆக மருந்து - 14.

பூனாகம் இரண்டரைப்படி எண்ணெய்க்கு
இந்த அவிழ்தங்களையெல்லாம் வகைக்கு-
காய் மருவொதி அரைத்துக் கூட்டிக் கொள்ளவும்.

14. இரத்த பித்தம் கண்நோய், தலை நோய்க்கு
இளநீர் எண்ணெய்.

இளநீர் - 4, நல்லெண்ணெய். 4 படி
ஆவின்பால் - 4 படி இதில் சுரக்கம் (குடிநீர்)
ஏலம், இலவங்கம், அதிமதுரம், சந்தனம்,
குங்குமம், அகில், பச்சிலை, நாகப்பூ,
தகரம், மாஞ்சில், கச்சோலம், அடவிக்-
-கச்சோலம், சாதிக்காய், கிராம்பு, தேவதாரம்,
மஞ்சட்டி, கடுகுரோகிணி, செண்பகப்பூ, செவ்வள்ளிக்-
கொடி, சவியம், சிறுமூலகம், சிறுதேக்கு,
வெள்ளி லோத்திரம், தாமரை இதழ், தண்ணி-
-விட்டான் கிழங்கு, இலாமிச்சம், முத்தக்காசு,
இருவேலி, செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை
வளையம் இவை ஒன்றரை நாழிக்கு ஒரு படி
பால் விட்டரைத்துக் கரைத்துப் பதத்தில்
வடித்து தலை ஒன்பது முறை நனைக்கவும்.
உள்ளுக்குங் கொள்ளவும்.
தீரும் வியாதி:- இரத்த பித்தம் கண்ணெரிவு,
கண்நோய், தலைநோய் தீரும்.

(ர்)

15 சிரவசித்தத்திற்குச் சந்தனாதித் தைலம்.

சந்தனம் - பலம்.1, இலுப்பைப்பூ - பலம்- மகிழம்பூ - பலம்- நன்னாரி வேர், எலுமிச்சம்-வேர்; வெட்டிவேர், செண்பகப்பூ, கோரைக்-கிழங்கு, நெல்லி வற்றல், இவை கூறொன்று

16. பலம் — இதுக்குத் தண்ணீர்

ஒன்றாய்க் காய்ச்சி, அந்தக் கஷாயத்தில் நாழி எண்ணெய் விடவும். இதுக்குக் கற்கம்

அஞ்சனக்கல்லு, இலாமிச்சம் வேர், இலவங்கப்பத்திரி, சீரகம், கருஞ்சீரகம், ஏலம், இலவங்கப்பத்திரி, சடாமாஞ்சி, லவங்கம், அதிமதுரம், இலுப்பைப்-பூ, வெட்டிவேர், செண்பகப்பூ, சாதிக்காய், தக்கோலம், கடுகுரோகிணி, நாககேசரம், வெட்பாலை அரிசி, தகரம் (தகரை), புனுகு-சட்டம், தண்ணீர்விட்டான் கிழங்கு, கண்டில்-வெண்ணெய், உகைநீறு, கோரைக் கிழங்கு, மலாக்காய், சந்தனம், கஸ்தூரி மஞ்சள், சாதிபத்திரி, கற்பூரம், தாமரை வளையம், முந்திரிகைப் பழம், இருநெய்தல் கிழங்கு, தேவதாரம், இலங்கப்பட்டை, திரிபலை, சீந்தில் தண்டு.

இவை நாழி எண்ணெய்க்கு வராகனிடை

3.4.86

பால் வார்த்தரைத்து பதத்தில் வடித்து
பூசவும்.

தீரும் வியாதி:- சர்வ பித்தமும் சர்வ
காசமுந் தீரும்.

16. மகா பூதிகாத் தைலம்.

சித்தாமுட்டிவேர், பேராமுட்டிவேர், தேவ-
தாரம், சங்கம் வேர், பாருவாய வேர்,
கொடுவேலி வேர், நொச்சின் வேர், அமுக்-
-கிரா வேர், எருக்கம் வேர், காட்டரணை வேர்,
காட்டாமணக்கம் வேர், சுக்கு, கொள்ளு,
உளுந்து, துவரை, முன்னைவேர், பாதிரிவேர்,
சிறுவழுதிலை வேர், வாகைவேர், சித்தமல்லி-
-வேர், பேரமல்லி வேர்.

இது ஒன்றொன்று சமன் கட்டி, இவை
எல்லாவற்றிற்கும் சமமாக ஆவரம்பட்டை
கட்டி இடித்து, இதற்கு எட்டுபாகம்
தண்ணீர் வார்த்து, எட்டொன்றாய்க்
காய்ச்சி வடித்து, எண்ணெய் ஒண்ணி வெள்ளாட்டுப்பால்
தாணி விட்டு, இதில் பேரத்தை இவை
எல்லாவற்றிற்கும் சமமாக கஷாயம்
செய்து அந்த எண்ணையில் கூட விட்டு
காய்க்கவும்.

மஞ்சள், நன்னாரிவேர், இலாமிச்சம்வேர்
கஸ்தூரி மஞ்சள், வாய் விளங்கம், இலவங்கப்
பூ, கடுகு, அதின் (அதிங்) கோரநத்தை, வட்டத்-
திருப்பிவேர், வேகதேவதாரம், சடாமாஞ்சில்,
அதிமதுரம், [illegible] கறிப்பானைவேர், நல்ல
சந்தனம், இவைகளை இடித்து வஸ்திரகா-
ாயஞ் செய்து எண்ணெயில் போட்டு,
இதில் ஆதண்டை இலைச்சாறு, நொச்சிச்-
சாறு, திருதாளைச்சாறு, கொன்றைக்-
கஷாயம் விட்டுப் பதத்தில் வடித்து
புனுகு கலந்து தலைக்கிடவும். வைத்துக்-
-கட்டவும்.

தீரும் வியாதிகள்!. இபாலவாய்வு, பிடரிக்கசிவு,
கன்னக்கூழை, அற்புதவாதம், சீயப்பிணிசம்,
பக்கப்பிணிசம், சிரோரோகம். இவை
எல்லாந் தீரும்.

17. அரக்காதித் தைலம்.

எருக்கிலை சமூலம் இடித்து சாறு படி-௨.
தென்னைப்பால் படி-௨. வாதமடக்கிச்சாறு
படி-1, நொச்சிச்சாறு படி-1, காட்டு-
முருங்கைச் சாறு படி-1 வெள்ளாட்டுப்-
-பால் படி-௨, நல்லெண்ணெய் படி-1,

வேப்பெண்ணெய் படி - விளக்கெண்ணெய்
படி - இலுப்பெண்ணெய் படி - புங்கெண்-
ணெய் - இதுவெல்லாம் அளந்து ஒரு
தாழியல் வார்த்து இதற்குக் கறக்கம்.
அதிமதுரம், கோஷ்டம், சதகுப்பை, தேவ-
தாரம், ஏலம், வாய்விளங்கம், மஞ்சள், கஸ்-
தூரிமஞ்சள், வெள்ளைப்பிசின், வலம்புரிக்-
காய், திப்பிலிமூலம், சித்திரமூலம், கடுகு-
ரோகிணி, வெட்பாலை அரிசி, சடாமாஞ்சில்,
குக்கில் இவையெல்லாம் படிக்கு இரண்டு
விரா. (மேற்கூறிய குடிநீரில்) இரண்டு
விராகனிடை வைத்து பால்விட்டரைத்து
பூண் மருந்தில் கலந்து, பெருங்காயம்,
ரசம், நெல்லிக்காய், கெந்தகம், வெள்ளைப்-
பாஷாணம், கௌரிப்பாஷாணம், அரிதாரம்,
மனோசிலை, நாபி, நாவிஷம் இவை
ஒரொன்று மூன்று பணவிடை நிறுத்து
அரைத்துக் கரைத்து மெழுகு பதத்தில்
வடித்து மேலுக்கு (உடம்பின் மீது) நாற்பது-
நாள் இடவும்.
தீரும் வியாதி: சன்னிவாதம், பக்கவாதம்,
எரிவாதம், நடுக்குவாதம், முடக்கு வாதம்,
வாதம், சந்துவாதம் இவை போன்ற எண்பது
வாதமும் தீரும்.

(தூர்வாசு)

18 தூருவாச மாரிஷி சந்தி(ரா)னோசித் தைலம்

மேகம்

இச்சிப் பட்டை, ஆலம்சுப்பட்டை, உதியம்-பட்டை, மருதம்பட்டை, அத்திப்பட்டை, மாம்பட்டை, நெல்லிப் பட்டை, நிலப்-பனைக் கிழங்கு, பழம்பாசி, முத்தக்காசு, வில்வ வேர், இலாமிச்சம் வேர், நன்னாரிவேர், த்தாளம் வேர், முடிவாளம், ஆவரம்-ட்டை. ஆக வகைக்கு பலம். 5.
(மேற்கூறிய ஒவ்வொன்றும் 5 பலம்)

20. இவைகளை ஒட்டி இடித்து ஒரு) பானையில் போட்டு அட்டு வள்ளைத் தண்ணீர் இரண்டு படியாகக் காய்ச்சி அதில் வடிகிற அரசம், தாழை விழுதுச் சார் படி-2, முசுமுசுக்கைச் சார்படி-2, காடி படி-2, பொன்னாங்காணிச் சார் படி-2, கத்தாளஞ்-சார் படி-2, தாளிச்சார் படி-2,
ஆக இந்த அரசமும் விட்டு, நெய்படி-4, இவை-நல்லெண்ணை படி-4 விட்டு, இவையெல்லாம் கூட்டித் தைலம் பண்ணிக் கொடுத்தால் தீர்ந்து போகும்.

தீரும் வியாதி: மேகம்.

19. உஷ்ணத்திற்கு எண்ணெய்

நெல்லிப் பருப்பு பலம் - 1, சீரகம் பலம் - 1/2
கடுக்ரோகணி பலம் - 1/2 கொத்தமல்லி பலம் - 3/4
தாழை விழுதுச் சாறு - 1 படி, பசுவின் பால் - 1 படி
கடை மருந்தைத் தண்ணீர் விட்டரைக்க
சீரகத்தையும், எண்ணெயும் விட்டுக் கலந்து
மெழுகு பதத்தில் வடித்துத் தலைக்குத்
தேய்க்கவும். ஒரு நாள் இருந்து மறுநாள்
முழுகவும்.

20. தீராத பழம் புண்ணிற்கு எண்ணெய்.

பறங்கிப் பட்டைச் சூரணம் - 2 பலம்,
ரசம் - 1 பலம், கெந்தகம் - 1 பலம்,
தாளகம் - 1 பலம், துத்தம் - துருசு -
நாபி - 8 பலம், வெள்ளைப் பாஷாணம் - 8 பலம்,
கௌரிப் பாஷாணம் - 8 பலம், வெள்ளைக்-
இங்கிலியம் - 2 பலம், சுடலை எலும்பு
தங்க பொன் மேஷக் கொன்றை, வசம்பு - 8 பலம்,
உதியம் பட்டை, அரசம் பட்டை. இவை-
எல்லாவற்றையும் அரைத்து வேப்பெண்-
ணையுள் கலந்து வைத்த பாகு சீலையால்
தோய்த்துப் புண்ணின் மேல் போடவும்.
தீரும் வியாதி: தீராத கிரந்திப் புண் ஆறும்.
பூ கிண்ணித் தண்டுப் பிளவை ராஜப் பிளவை

வெடி சூலையும், குன்மவாயு, தீராத பழம்
ண்ணெ இவை தீரும்.

91. சிரசுப் பிணிக்கும், சூலைக்குப் பாவனமான
எண்ணெய்.

சுருவேலம் பட்டை, கையாந்தகரை,
சிற்றாமுத்தர சாறு, வகைக்கு படி - 1.
லம், இலவங்கம், அதிமதுரம், கொடிவேலி
க் கோஷ்டம், சன்பகப்பூ, ஜாதிக்காய்,
காணிக்காய், சித்திரமுத்தேக்கு, அரத்தை, தானிக்காய், சித்திர-
வேதி, கிராம்பு. இவை வகைக்கு வராகன்-5

ஆக மருந்து - 11 க்கு
கையாந்தகரைச் சாறு, வரத்து நாழி, பசு
நெய்யும் நாழி, நல்லெண்ணையும், காட்டு-
மருந்து, முசுமுசுக்கைச் சாறு -
தாளைச்சாறு - பொன்னாங் காணிச்-
சாறு - நெல்லிக்காய்ச் சாறு க்கு

ஆகவகை - 4 க்கு படி - 1. இவையெல்லாம்
ஒன்றாய்க் கூட்டி இடித்துத் தலைக்குத் தேய்த்து
நாசிக்கு வார்த்து, பகல் இருபது நாழிகை
-யளவில் சீகைக்காய் அல்லது உசிலந்தழை-
யாவது தேய்த்து முழுகவும்.

தீரும்வியாதி:- பெருமலியாதி பிணிக்கும், மண்டை-

ஜனை, குபால வாய்வு, கண்ணில் நீர் வழிதல்,
மூக்குநீர் வடிகிறது, மண்டை வியாதி,
நேத்திர ரோகம் முதலானதும் தீரும்.

௨௨. விஷமுட்டித் தைலம்.
மகாப் பிரயோகம்

நீர்வெட்டி எண்ணெய் — நாழி
செந்திருக்கம் எண்ணெய் — 1 ,,
ஆதளை எண்ணெய் — 1 ,,
தேங்காய் எண்ணெய் — 1 ,,
முட்டைத் தைலம் — 1 ,,
முதலை நெய் — 1 ,,
பேய்க்கொமட்டி எண்ணெய் — 1 ,,
புங்கெண்ணெய் — 1 ,,
நல்லெண்ணெய் — 1 ,,
பேய்ப்பீர்க்கெண்ணெய் — 1 ,,
சித்திரமணக்கெண்ணெய் — 1 ,,
இலுப்பெண்ணெய் — 1 ,,
தவளை நெய் — 1 ,,

இப்பால் நாட்டு மருந்து வகை.
வேங்கை வயிரம், கரை எறும்படடி,
நாய்க்கொட்டான் பட்டை, மறலை மாதளை,
மலை ஆதளை, மலை ஆவிரை, எச்சம்-
பட்டை, ஒதியம் பட்டை, இளவாதண்டம்-
பட்டை, ஜோதி விருட்சம்

முடவாட்டுக்கால், வண்டுகொல்லிப் பட்டை
குடவிரீத்திப் பட்டை, வல்லிவேர், மஞ்சள்-
கடம்புப் பட்டை, நீர்க்கடம்புப் பட்டை,
கருங்குங்கிலியப் பட்டை, வெள்ளைக்-
குங்கிலியப் பட்டை, பிரப்பங் கொடி,
அகில்க் கட்டை, தேவதாரப் பட்டை,
செஞ்சந்தனப் பட்டை, பூலாவிருக்கம்பட்டை
கலை ஆமணக்கம் பட்டை, வெள்தாமரை,
வெள்ளிக் கிழங்கு, கோரைக் கிழங்கு,
காவென் கோவைக் கிழங்கு, கோடாங்-
கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு,
புன்நடலைக் கிழங்கு, வெருகங் கிழங்கு,
அமுக்கிராக் கிழங்கு, ஆதளை வேர்,
அவரி வேர், ஆணை நெருஞ்சி வேர்,
சிறு நெருஞ்சி வேர், குப்பைமேனி வேர்,
நாய் வேளை வேர், எருக்கலம் வேர், கொடிக்-
-கள்ளி வேர், இலைக்கள்ளி வேர், முள்ளெக்-
கள்ளி வேர், திருகு கள்ளி வேர், கழற்சி வேர்,
கற்றாழை வேர், விளாம் பட்டை, கொழிஞ்சி-
-வேர், எ.ச்சம் பட்டை, மலை எ.ச்சம் பட்டை,
மலைக்கொட்டைப் பட்டை, மலை விளாம்-
-பட்டை, சாயவேர், உடார்ச் சாயவேர்,
நிலவேம்பு, வெள்ளிப் பிசின் பட்டை,
வலம்புரிக் காய்ப் பட்டை, நேர்வாளைவிரை-
யப்பட்டை,

ணைச் செங்கத்தாரிப் பட்டை சென்ன-
ரம்பி, மாத்திப் பட்டை, பேய்ப்புடல், சீந்தில்-
-கொடி, வெட்டுக்கிரந்தி, பற்படாகம்,-
ஆடாதொடை, கண்டங்கத்திரி, தூது-
வளை, சிறுபுள்ளடி, வில்வை வேர், திருக்-
கீரை வேர், பொன்னாங்காணி வேர்,
ழி வேர், மருதோணி வேர், இலுப்பைப் பட்டை,
உவாயம் பட்டை, நெரு-
ணைப் பட்டை,
தொட்டி வேர், சிவனார் வேம்பு, வெள்ளருகு,
கருணொச்சி, வெளாமணக்கு, செந்நா-
-யுருவி வேர், செம்முள்ளி வேர், பெருங்-
-குறிஞ்சா வேர், சிறுகுறிஞ்சா வேர், வாத-
மடக்கி வேர், நொச்சி வேர், எலுமிச்சம்-
வேர், தொணைவணை, புங்கம் வேர்,
மாவிலங்கம் பட்டை, புன்முருங்கைப்-
பட்டை, முருங்கைப் பட்டை, நெல்லுக்-
கொடி, கொத்திப் பருப்பு, இலைச் சுண்ணம்,
மஞ்சட்டிப் பட்டை, பொடுதலை, குன்று-
-மணி வேர், கருங்குன்றி வேர், பாடவர்-
கினை, ஆமணக்கம் வேர், கருவேலம் வேர்,
கிலுகிலுப்பை வேர், வெள்வேலம் வேர்,
நரியுடை வேர், இலந்தை வேர், கற்கொழுஞ்சி வேர்,

திருந்தொட்டிவேர், மகிழம் வேர், வெற்றிலைக்-
கொடி, நீர்ப்பூலா வேர், குழிப்பாலை வேர்,
வெடப்பூலா வேர், நீந்தி வேர், வைகுகைப் -
கிழங்கு, எலிமிச்சு வேர், செங்கீரைத்தண்டு,
நீர்முள்ளி வேர், பேய்க்கொமட்டி வேர்,
பேய்ப் பீர்க்கு வேர், மஞ்சணாத்திப்பட்டை,
[illegible]ன்னைப் பட்டை, வேப்பம் பட்டை,
வெங்கப் பட்டை, மின்னை வேர்,
வலிப்பருத்தி, அகிற்பட்டை, காட்டு-
மல்லி வேர், நல்ல மல்லிகை வேர், சங்கங்-
-குப்பிச் சமூலம், பெருந்தும்பை, வீழிவேர்,
23. பொன்னாங்காணி வேர், பொன் முசுட்டை,
பொன்னாவரை, வல்லாரை, வக்கணாத்திப்-
-பட்டை, நிலவாகைச் சமூலமும், அழிஞ்சிப்-
-பட்டை, வைரை மல்லிகை, இத்தாக்குசமட்டி,
கொடிவேலி வேர், செம்பருத்தி வேர், நெல்லிப்-
பட்டை, அத்திப்பட்டை, அரசம்பட்டை,
கிளுவைப் பட்டை, நாவல்ப் பட்டை, ஆவி-
-ரம்பட்டை, புரசம்பட்டை, வல்லிப்பட்டை,
துவரப் பட்டை, துத்தி வேர், ஆடுதின்னாப்-
பாளை, வெள்ளை வெங்காயத்தோல், காறகிரப்-
பட்டை.

இவையெல்லாம் கூட்டி அரையாங்
காய்ச்சி
கொண்டு தைலம் எடுத்துக்கொள்ளவேண்டும்
இத்தைலத்துடன் கடைச்சரக்குங் கூட்டி
முழுகவும், மேலுக்கு (உடம்பில்) தேய்க்கவும்.
தீரும் வியாதி! வாத பித்தம், சேற்றுமம்,
உமைமாந்தை, காசநோய், அண்டவாய்வு,
சிர் வாதம், சர்வாங்கவாதம், நடுக்கு-
தம், நடுக்கு வாதம், ஆகிரம சன்னி எட்டும்,
பின்வீச்சு, முன்வீச்சு ஆகியவை இத்-
-தைலத்தான் தீரும்.

23. நேத்திர வாய்வுக்கு எண்ணெய்.

நல்லெண்ணெய் படி - 1, நொச்சிச்சாறு - 1 படி,
குப்பைமேனிச் சாறு - 1 படி, திப்பிலி - பலம் 5
மஞ்சள் - 5 பலம், கடுக்காய் - 5 பலம்,
சுக்கு - 5 பலம், வெள்ளைவெங்காயம் - பலம் 5
கஸ்தூரி மஞ்சள் - பலம் 5, ஆசக்கட்டி பலம் 5
மிளகு - 1 படி.

இவைகளைப் பொடி செய்து, எண்ணெயைக்-
காயவைக்கவும். அதற்கு ஆவாரம் விறகு
போட்டு எரிக்கவும். எண்ணெய் காய்ந்த பிறகு
செய்து வைத்த பொடியைப் போடவும்.
இவ்வாறு காய்ச்சியும் பக்குவமாய்

கொண்டு எண்ணையை தலையில் தேய்த்து
ச்சை அரப்புக் கொண்டு நாள்க்கொரு-
கால் முழுகி வரவும். பிறகு நொச்சி-
இலைச் சாறு விட்டு முழுகவும்.

பத்தியம்: உப்பு, புளி தவிர்க்கவும்.
நோய் தீரும்.

சர்வ வாத நாராயண எண்ணெய்த் தைலம்

வேப்பெண்ணை - 1 படி, எருக்கம்பால் - 1 படி,
நொச்சிச் சாறு - 1 படி, முடக்கொத்தான்-
சாறு - 1 படி. ஆக இந்நான்கினையுங்-
கூட்டி, திரிகடுகு, வெள்ளைவெங்காயம்,
பெருங்காயம், வசம்பு - 4 பலம். இவற்றைத்-
தூள் பண்ணிப் போட்டு வடித்து உள்ளுக்-
கொடுத்து மேலுக்கும் பூசவேண்டும்.
பிறகு முடக்கொத்தான், நொச்சித்தழை
போட்டுக் காய்ச்சி அந்த நீரைக் கொண்டு
வேது கொடுக்க வேண்டும்.

தீரும் வியாதி: சர்வ வாதமும்
தீரும்.

25. ## மகா பிருங்காமலத் தைலம்.

பெய்ப்புடல், சீந்திக்கொடி, விஷ்ணுகிராந்தி,
பற்படாகம், கஞ்சாங்கோரை, கையாந்த
கரை, சிறுக்கீரை வேர், பொன்னாங்காணி-
வேர், நன்னாரி வேர், தாழை விழுது,
மின்னி வேர், முசுமுசுக்கை வேர்.

இவை வகைக்குப் பலம் 1/2, ~~இவைகளை~~ அனைவும்
...க்கால் தண்ணீரில் வைத்து குறுணியான
...கு சுக்கு, திப்பிலி, மிளகு, தேவதாரம்,
செஞ்சந்தனம், சீரகம், சடாமாஞ்சி,
மஞ்சட்டி, மரமஞ்சள், ஏலம், இலவங்கப்பத்திரி,
லவங்கப்பட்டை, அதிமதுரம், செங்கழுநீர்,
கோஷ்டம், சண்பகப்பூ, சதகுப்பை,
ஆவா விறுக்கம், நாகப்பூ, கிராம்பு, சாதிக்காய்,
சாதிபத்திரி, வாய்விளங்கம், கொத்தமல்லி,
குரோசாணி ஓமம், கர்க்கடகசிங்கி, சித்தரத்தை
பேரரத்தை. இவை எல்லாம் ~~[illegible]~~ அரைவு
நாழி யெண்ணெய்க்கு ஒரு ~~பலம்~~ விராகனிடை நிறுத்துக்-
கொண்டு கஷாயத்துடனே போட்டு, நெல்-
லிக் காய்ச்சாறு, பசுவின்பால், முன்னாழி
எலுமிச்சம் வேர் போட்டு பதத்தில் வடித்துத்
தேய்க்கவும்.

தீரும் வியாதி: பித்த ரோகத்துடனே கூடிய
வியாதி தீரும்.

26 வெருகெண்ணெய்.

நல்லெண்ணெய் - 1 படி, வெருகாங்கிழங்கு-
பலம் - 30, அமுக்கிரா வேர் - பலம் - 15,
பேய்ப்புடல் - பலம் - 30, பற்படாகம் - பலம் - 10,
கஞ்சாங்கோரை - பலம் - 20, ஆடாதொடை -
பலம் - 10, கண்டங்கத்திரி வேர் - பலம் - 10.

வெருகாங்கிழங்கை முக்குறுணி காடிவிட்டு
கஷாயமாக நாலு மரக்கால் தண்ணீர்
விட்டு காட்டு மருந்து கூடப் போட்டு,
வெருகாங் கிழங்குத் தண்ணீரும், மருந்துக்
கஷாயமும் கூட விட்டு, சுக்கு, திப்பிலி,
மிளகு, சீரகம், ஏலம், இலவங்கப் பட்டை,
27 அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், சண்-
பகப்பூ, சாதிக்காய், நாகப்பூ.

இவையெல்லாம் வகைக்கு விராகனிடை-1
கஷாயம் வாரத் தரைத்து எண்ணெயிற்
கலந்து, எலுமிச்சை வேர் ~~10~~ 10-பலம்,
கஷாயத்துடனே போட்டுப் பசுவின்பால்
இரு நாழி விட்டு வைத்துக் கொள்ளவும்.
ஒரு முறை தேய்த்து
மூன்று நாட்களுக்கு ஒரு முறை தேய்த்து
முழுகவும். பத்தியம் - புளிவிடவும். (முழுகின-
நாள்) தீரும் வியாதி:- உட்காய்ச்சல், சயம்,
மார்பைப் பற்றிய ரோகங்களும், காது
கேளாமையும் தீரும்.

26 சர்வ வண்டுகடித் தைலம்.

வேப்பம்பட்டை, புங்கம்பட்டை, விளாம்-பட்டை, ஊஞ்சப்பட்டை, கருத்த பொரிசம்-பட்டை, வெள்ளைப் பொரிசம்பட்டை, ~~வெள்ளைப் பொரிசம்பட்டை~~, தேக்காந்திராய் இவைகளைப் புடத்திலிருந்து தயிலம் வாங்கித் தடவவும். உள்ளுக்கும் சாறு கொள்ளவும்.

தீரும் வியாதி: சர்வ வண்டு கடியும் பொரிந்து பட்டுப் போகும்.

27. வாதத்திற்கு கொம்புத் தைலம்.

வேப்பெண்ணை - 1/2 படி, எருமைக்கொம்பு சீவினது பலம்-1, வெள்ளைவெங்காயம் - 1 பலம், செங்கழுநீர்க்கோஷ்டம் - 2 பலம், கற்பூரசிலாசித்து - 2 பலம், அரத்தை - 2 பலம், தேங்காய் திருகினது - 2 பலம். இவைகளை எல்லாம் சேர்த்துச் சீலை(சேலை)யில் அடைட்டு திரியாக்கி வேப்பெண்ணை ஊத்தி எரியவைக்கவும். திரி எரிய எரியச் சாய்த்துபிடித்துத்

தைலம் வரும். அந்தக் கருக்குடன்
இழைத்துப் பூசவும்.
தீரும் வியாதி:- சன்னியும், வலியும்,
வாதமுந் தீரும்.

௨௮. வாதத் தைலம்.

வேங்கைப் பட்டை - ௨௦ பலம், வில்வ-
வேர் - 10 பலம், சித்தாமுட்டி - 10 பலம்.
இவை தரித்துப் பதைத்துக்கு இரண்டு படி
தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க்-
காய்ச்சி வடித்து, நல்லெண்ணெய் - படி 1,
பசுவின் பால் - 2 படி விட்டு இதுக்குக்
கிறக்கம். சடாமாஞ்சில், தேவதாரம், மர-
-மஞ்சள், அமுக்கிரா, கடுக்காய், நெல்லிக்காய்,
தாணிக்காய், அதிமதுரம், தகரம் அசாவது
வெள்ளிலோத்திரம், கச்சோலம், நன்னாரி,
எலுமிச்சம் வேர், முத்தக்காசு, கோஷ்டம்,
செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை வளையம்,
சந்தனம், சீதுப்பு (உவருப்பு). இவைகளை
வகைக்கு விராகன் - 1 எடுத்து அரைத்துக்-
கரைத்து மெழுகு பதத்தில் வடித்து
சனியும், புதனும் முழுகவும்.

தீரும் வியாதி: கண்ணிலுள்ள நோகம், கண்ணு பூளை நோகம், நேத்திர நோகம், அற்புத வாதம், காசம், பிரசன், தலைவலி இவை சகலமுந் தீரும்.

29. மகா பிருங்காமலத் தைலம்.

வெட்சிப்பூ, இருவாட்சிப்பூ, தும்பைப்பூ, நியாவட்டப்பூ, தாமரைப்பூ, மல்லிகைப்பூ, ஜாதிப்பூ, தாமரைக் கிழங்கு, அல்லிக்கிழங்கு, கொட்டிக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, இந்த வகைப் பூவும், கிழங்கும் வகைக்கு படிச் சாறு, செங்கழுநீர்க்கிழங்கு, தாழைவிழுது இதுவும் அந்தப்படி, பொன்னாங்காணி, சிறுக்கீரை, கையாந்தகரை, சீந்தித் தண்டு, சீதேவி, செங்கழுநீர், பூமிசக்கரை, ஆற்றுத் தாமரை, முசுமுசுக்கை, பாதிரி வேர், பருத்திவேர், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டி வேர், விஷ்ணு கிராந்தி, தண்ணீர்விட்டான் கிழங்கு, நன்னாரிவேர், முத்தக்காசு, இந்த மூலிகை வகைக்கு படி-1.

செவ்வேள் நீர் - படி-4, பனைமட்டைச் சாறு படி-4.

கடைச்சரக்கு வகை: மிளகு, சீரகம்,
ஏலரிசி, கொத்தமல்லி, கஸ்த்தூரி மிளகு,
தாளிசப் பத்திரி, குங்குமப்பூ, கோரோசனை
மலர்க்காய், சந்தணம், பச்சைக் கற்பூரம்,
பச்சைப் புனுகு, கஸ்த்தூரி, ஆக
வகைக்கு வராகனிடை பணம் -6.
பூலாங் கிழங்கு, பச்சிலை, செங்கழுநீர்,
காஷ்ட்டம், கச்சோலம், அதிமதுரம்,
சண்பகப்பூ, கடுகுரோகிணி, மஞ்சட்டி,
சாஸ்த்திரவேதி, லவங்கப் பட்டை, லவங்-
-கப் பத்திரி, சாதிக்காய், கிராம்பு, வசுவாசி,
அதிவிடையம், சிறுநாகப்பூ, இலவ
விளாவரிசி, இந்தக் கடைச்சரக்கு)
வகைக்கு விராகனிடை-6,
பசுவின்பால்வார்த்தரைத்து, முன்
சொன்ன சரகமும், பசுவின்பால் - படி-4,
பூசணிக்காய்ச் சாறு - படி-4, நல்லெண்-
-ணை படி-4, இவையெல்லாம் ஒன்றாய்க்-
கரைத்து விநாயக பூசை செய்து அடுப்பின்
மேல் வைத்துக் கிண்டி போட்டு அடிப்-
பத்திரமன் கிளறி ~~காய்ச்சி~~ காய்ச்சி கலிப்பதத்தில்
காய்ச்சி இறக்கி, ஒரு கலசத்தில் வார்த்து
தானிய 4 டம் 15 நாள் வைத்தெடுக்கவும்.

தீரும் வியாதி: அக சரீரத்திற்கு மேற்பட்ட
இடத்தில் உண்டான ரோகாதி ரோகங்களெல்-
லாம் தீரும். இது நிச்சயம்.

இது பூரண யோகம்.

தெட்சணா மூர்த்தி துணை செய்யவும்.

30. மகா பிரசாரணித் தைலம். ✓

முதியார் கூந்தல் - பலம்-10, திசிமிலம், வில்வம், பெருங்குமிழ், தருதாழை, பாதிரி, முன்னை வில்வம், பஞ்சகம், சித்தமல்லி வேர், பேராமல்லி வேர், ஆடாதொடை, கண்டங்கத்திரி, சிறு-வழுதுணை. இவ்வகைக்கு பலம்-20.

சிற்றாமட்டி, பெராமுட்டி வேர், நீர்முள்ளி, செம்முள்ளி, ஆயில்ப்பட்டை, முருங்கை, புன்முருங்கை, சாரணை, ஆமணக்கு, தெவ்வியம், குதிரைச் செவி மருந்து, வீழி வேர், விடத்தேரா வேர், அழிஞ்சில்-வேர், புன்னை வேர், எட்டி வேர், இண்டு-வேர், கொள்ளு, உழுந்து, கடலை, செம்-புளிச்சை, கொன்னாரை, நொச்சிக்காய், பருத்தி, ஏரழிஞ்சி, மனைவண்ணக் கிழங்கின்

துளசிவேர், வெட்பாலைவேர், தூதுவிளை,
ஆவரி, கருங்காலி, சொங்கொட்டை,
இணைப்பு விரை, அசமதாகம், சித்திமுத்தின்,
புங்கு, இவைகளின் வேர் கூட்டி,
கிருது பட்டை. இவை ஒவ்வொன்று
பலம்-10. இடித்துக் கலத் தண்ணீர் வைத்து
தக்கு நாளியாகக் காய்ச்சிக் கஷாயத்தில்
ஒருமாங்கிஷம் (நீர்) பதக்கு விட்டுத்
என்னெயும். பசுவின் பால் பதக்கு விட்டு
நன்னெண்ணெயை இறுத்தி இதற்க்கு கற்கம்.

முத்தக்காசு, கின்ன கச்சோலம், செம்-
புளிச்சை, தினையரிசி, கச்சோலம், அசம-
தாகம், குங்குமம், இக்கிஷு, அகின்க்கட்டை,
கடுகு, சித்தரமட்டி வேர், அரத்தை, கோஷ்டம்,
சாதிக்காய், அரேணுகம், அதிமதுரம், அக்கு,
திப்பிலி, மிளகு, மஞ்சட்டி, சித்தரத்தை,
எலுமிச்சம், ~~சி~~ சிறு கோஷ்டம், புலிதொடக்கி,
நாகப்பூ, செண்பகமொட்டு, ஏலம்,
இலவங்கம், இலுப்பைப்பூ, திரிபலை,
கடுக்காய், நெல்லிமொளி, தாணிக்காய்
நல்ல சந்தனம், கடுகு, உளுந்து, பெருங்-
-காயம், இந்துப்பூ, பச்சை வெட்டு, செஞ்-
சந்தனம், வெட்டிவேர், வசம்பு, வெண்மிளகு,

4.4.86.

அதிவிடையம், மூங்கில் விடை, புன்னைக்-
கொட்டை, கார்போக அரிசி, தகரை விதை
இவைகளை ஒவ்வொன்று 1-விராகக்-
னிடை எடுத்து அரைத்துக் கரைத்து
32 மூன்றுநாள் இளங்கொதியாட்டு நாலாம்-
நாள் பதத்தில் வடித்து மேலுக் கிடவும்.
தீரும் வியாதி:- குமார கண்டம், உன்மாத்தம்
...தம், பித்தம் வெப்புநோய், நடக்கவொட்டாத-
வாதம், மேல்வாதம், கழுத்து கோணுதல்,
வாய்கோணுதல், கண்கோணுதல், கை-
கால் ஆடுதல், கண், வாய் கிட்டுதல்,
இடுப்புக் கடுப்பு, சந்துக் கடுப்பு இவை-
யெல்லாம் ~~தீரும்~~. தீரும்.

31. அரக்காதித் தைலம்.

எருக்குச் சமூலச்சாறு - 4 படி,
நல்லெண்ணெய் - 4 படி, ஆட்டுப்பால் - 4 படி
இதில் கரைக்கும் மருந்து:- ஏலம், இலவங்-
-கப்பட்டை, தகரம், செங்கழுநீர்க்கிழங்கும்,
கடுகு, இந்துப்பு, திப்பிலி. இவை ஒவ்வொன்றும்
விராகனிடை எடுத்து அரைத்துப்
பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

தீரும் வியாதி:- சூத்தை வளைந்து நிற்கிற வாதம், சந்துபிடிக்கிற வாதம், இரத்த வாதம், ஆகிய 84 வாதமும் தீரும்.

32. விஷமுட்டித் தைலம்

எட்டிப் பழச்சாறு - 2 படி, நல்லெண்ணை - 2 படி, பசுநெய் - 1 படி, ஆமணக்கெண்ணை - 1 படி, பசுவின் பால் - 4 படி, எருக்கு, நொச்சி, ஊமத்தை, எலுமிச்சம் பழம், கொடிவேலி, இலைச்சாறு, அழுக்கிரா, இஞ்சிச்சாறு, மூவிலைச்சி, மாவிலிங்கையிலை, துளசி, கள்ளி, முருங்கையிலை, நிலவு-காயா வாகை, தகரை, புளியிலைச் சாறு, சாரணை, பேய்ச்சுரை, விடத்-தெருந்திச் சாறு, பேய்ப்பீர்க்கம் இலைச்சாறு, இவை ஒவ்வொன்றுக்குச் சாறு - 1 படி.

இதில் கரைக்க மருந்து:- துளசி, பச்சிலை, மரமஞ்சள், அதிமதுரம், கோஷ்டம், இந்துப்பு, கொடிவேலி வேர், மஞ்சள், திப்பிலி, ஏலம், நல்ல சந்தனம், இலவங்கப்பட்டை, கிக்கிலம், புளியரி, கண்டங்கத்திரி கோளம், அரத்தை, சாதிலிங்கம், பச்சை-நாவி, அரிதாரம், மனோசிலை, கோரோசனை,

எலிப்பாசாணம், இவை ஒவ்வொன்றுடம்
ஒரு பலம், எட்டி விதை - உ பலம். இவை-
யெல்லாவற்றையும் சூரணமாக்கி, வஸ்திரகாயஞ்
செய்து ஒன்றாகக் கூட்டி எண்ணெயில்
போட்டு வடித்துப் பதத்தில் இறக்கி மேலுக்-
-கிட 84 வாதமுந் தீரும்.

வகி நாராயணத் தைலம்.

திசைமூலம்-10, மாவிலிங்கு, ஆமணக்கு,
நொச்சி, புங்கு, கருங்காலி, வெருப்பகை,
முதியார் கூந்தல், மணவண்ணக் குறிஞ்சி,
வட்டத்திருப்பு, முள்முருங்கை, சீந்திக்கொடி,
கொன்றை, ஆடாதொடை, தேள்க்கொடுக்கு,
சாரணை, சித்திர மூலம், நீர்முள்ளி, சதில்லை,
எருக்கு, தூதுவளை, பச்சிலை, தேவதாரம்,
செம்புளிச்சை, மஞ்சள், மரமஞ்சள்,
சிறுகாஞ்சொறி, நிலவுகாய், பாவைவேர்,
நெரிஞ்சிவேர், இவை ஒவ்வொன்று பலம்-10
இதுக்குத் தண்ணீர் கலம் விட்டு
பதக்கக் காய்ச்சி கஷாயம் வடித்து
யிது எண்ணெய் - 4படி. இதுக்குக் கற்கம்.
மகாகாகொளிஞ்சி, க்ஷீர்காகோளி
மஞ்சிட்டி, அதிமதுரம், சித்தாமட்டி

பாளை வேர், பச்சிலை, தேவதாரம், இருப்பைப்பூ
திரிகடுகம், அரத்தை, மஞ்சள், மரமஞ்சள்
ஆமணக்கம் வேர்ப் பட்டை, அமுக்கிராவேர்
சந்தனம், செஞ்சந்தனம், கஸ்தூரி மஞ்சள்,
குங்குமப்பூ, அகில் கட்டை, சாதிக்காய்,
நீக்கோலம், செண்பக மொட்டு.
இவை ஒவ்வொன்றுக்கு இரண்டு
ராகெடை, தண்ணீர் விட்டான் சாறு - 34
இவைகளைப் பொடித்து சூரணம் செய்து
எண்ணெயில் போட்டு பதத்தில் வடித்து
உடம்பு பிடிப்பக்கவும்.
தீரும் வியாதி :- சகல வாதமும் தீரும்.

4. பீனிசத்திற்கு நாரத்தாங்காய்த் தைலம்,
நார்த்தம் பழச்சாறு, துளசிச் சாறு, வெற்றி-
லைச் சாறு, கையாந்தகரைச் சாறு, பொன்-
னாங்காணிச் சாறு, பச்சை மஞ்சள்ச்சாறு,
இவை வகைக்கு நல்லெண்ணெய் - படி
இது துளாவிக் காய்ச்சவும். இதற்கு
சரக்கம். சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள்,
மரமஞ்சள், லவங்கம், சித்தரத்தை, கஸ்தூரி-
மஞ்சள், குங்குமப்பூ, ஏலம், சீரகம், சயித்தி-
-வனம், கோரோசனை, இவை

ஒவ்வொன்றும் பணவிடை எடுத்து
சூரணஞ் செய்த எண்ணெயில் போட்டு
மறுபடி பாகத்திலிறக்கி நசியம் பண்ணவும்.
தீரும் வியாதி:- சயப்பீனிசம், இரத்தப்-
பீனிசம், அத்திப்பீனிசம் இந்த நாலு
வகைப் ~~பீன~~ பீனிசமும் தீரும்.

35 **பரந்துவாசத் தைலம்**
(பீனிசத்துக்கு)

அருகம் வேர், நொச்சிவேர், கையாந்தகரை,
பொன்னாங்காணி, பசுமஞ்சள் (பச்சை-
மஞ்சள்) இவைகள் சாறு வகைக்கு
1 படி எடுத்து, நல்லெண்ணெய் - 1 படி
அதனுடன் கலந்து திராவிக் காய்ச்சவும்.
இதுக்குக் கறக்கம், மிளகு - பலம் 1
உடைத்துப் போட்டு பதத்திலிறக்கி
வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.
இதற்கு மேல் மருந்து
கோரோசனை - விராகனிடை - ௨.
இலவங்கம் - விராகனிடை - ௨
ரசச் செந்தூரம் - விராகனிடை - ௨
இவைகளைப் போட்டு பொடி செய்து
முன் வடித்த தைலத்தில் போட்டுவைக்கவும்

இந்தத் தைலத்தை ஒருநாள் விட்டு ஒருநாள் மூக்கிற்கு மூன்று துளி யிடவும். தீரும் வியாதி! ஆறுவகை பீனிசமுந் தீரும்.

36. நசியத் தைலம். ✓

தும்பை, கையாந்தகரை, நொச்சி, பாகல், ...ம்மை, மஞ்சள், இஞ்சி. இவையனைத்து சாறு கொண்டு, இது வகைக்குச் சாறு-1படி.

கற்கம் (குடிநீர்)

அதிமதுரம், சுக்கு, மிளகு, அமுக்ரா (?) -

வகை-பலம்-50,

சுக்கு வகைக்கு விராகனிடை -1.

திருவழுதிலைப் படிச்சாறு -1படி, நல்லெண்-ணெய்-1படி இவற்றைச் சூரணம் போட்டு மெழுகு செய்து அந்தத் தைலத்தில் மூன்று துளியெடுத்தில் வடித்து நாசிக்கு மூன்று துளியிட்டு நசியம் பண்ணவும்.

37. இந்திராணித் தைலம். ✓

புங்கெண்ணை, வேப்பெண்ணை, இலுப்-பெண்ணை, நல்லெண்ணை, விளக்கெண்-ணை, சுவரிக் கொத்து வேர், அமுக்கிராங்-கிழங்கு, மிளகரணை, கொள்ளிஞ்சி வேர், வண்ணாத்தி வேர், அவுரி வேர், நாய் வேர், பாவை வேர்

ஊமத்தம் வேர், நாரத்தம் வேர், பூணைக்காலி-
வேர், கிடாயிக் கிறும்பி, முகாறு முட்டை,
புடையன் பாம்பு, நல்ல பாம்புக் கண்டம்,
இவற்றை கஷாயம் வைத்து கொடுக்கவும்.

இதுக்கு தர்க்கம்

அரத்தை, மரமஞ்சள், பூதகரப்பன் பட்டை,
கைச திப்பிலி, திப்பிலி மூலம், சிறு தேக்கு
வணார் வேம்பு, வலம்புரிக்காய், கிராம்பு,
சுக்கு, வெள்வெங்காயம், பெருங்காயம்,
இவைகள் கழுஞ்சு விழுக்காடு கூட்டி
தைலம் பதத்தில் வடித்து சர்வாங்கமும்
பிடிப்பிக்கவும்.

84 வாதமும் தீரும்.

இதற்கு வேது :- சதிர்க்கள்ளி, நொக்கு,
புளியிலை, துளசி, சிற்றாமுட்டி, பேராமுட்டி,
வில்வ பத்திரி, விளாவிலை, முதியார் கூந்தல்,
முருங்கையிலை, புங்கயிலை, ஆட்டாங்கொடி,
நொச்சித்தழை, தழுதாழை, அமுக்கிரா,
மாவிலிங்கு, ஆடாதொடை, பாவட்டை
இவை ஒவ்வொன்று படி, பதக்குத் தண்ணீரிலே
வேக வைத்து வேது பிடிக்கவும்.

தீரும் வியாதி :- இதனால் 84 வாதமும்
தீரும்.

38. நேத்திர ரோகத்துக்கு வில்வாதித் தைலம்

நல்லெண்ணெய்-1½ படி, வெள்ளைமரச்சிராய்,
சீந்திக்கொடி, வில்வவேர், சித்தாமட்டிவேர்,
இவை ஒவ்வொன்றுக்கும் பலம்-2½
இவற்றை இடித்துப் பதக்குத் தண்ணீர் விட்டு
நாழியாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.
இதற்குக் கறக்கம்:- அமுக்கரா வேர், சித்ரா-
மட்டிவேர், அரத்தை, நாகமந்தி, கோஷ்டம்,
முத்தக்காசு, சந்தனம், மஞ்சள், கடுகுரோகணி,
சதகுப்பை, பெருங்குரும்பை, திப்பிலிமூலம், தேவ-
தாரம், செவ்வல்லிக்கொடி, அதிமதுரம், இலாமிச்சம்-
வேர், பசுவின்பால்-1படி. இவை வகைக்கு
விராகனிடை-1
இவைகளை சூரணம் செய்து எண்ணெயில்
போட்டு

தீரும் வியாதி:. நேத்திரரோகம், சிரோவாய்வு,
கண் சிவப்பு ~~கண்~~ தீரும்.

39. பித்த நேத்திர ரோகத்துக்கு நாரிக் கேளாதித் தைலம்.

இளநீர்-பதக்கு, நல்லெண்ணெய்-நாழி,
பால்-4, நாழி, இதற்குக் கறக்கம்.
அதிமதுரம், சந்தனம், குங்குமம், நன்னாரிவேர்

அகிற்க்கட்டை, கோஷ்டம், ஏலம், இலவங்கம் லவங்கப் பத்திரி, சொப்தாணீர்க் கிழங்கு, தாமரைத்-தாது, மாஞ்சில், தண்ணிவிட்டான் கிழங்கு, மதுரம்,

ஆரோக்கியத்துக்கு காரணமிதெ இல்லாமதெ எக்காலமும் உண்டுவந்தால் வைகடத்திற்குக்-காரணமாக இருக்கும்.

இனி இரசத்தின் வகை சொல்லுவான்.

காரம், கசப்பு, துவர்ப்பு. இந்த மூன்று ரசங்களி-னாலே வாதம் கோபிக்கும்.

காரம், புளிப்பு, உப்பு. இந்த மூன்று ரசங்-களினாலே பைத்தியம் பிறகோபிக்கும்.

மதுரம், புளி, உப்பு இந்த மூன்று ரசங்-களினாலே சேற்றுமம் பிற கோபிக்கும்.

இதுக்கு விரோதமான மூன்று வகை ரசங்கள் சொல்லுகின்றான்,

மதுரம், புளிப்பு, உப்பு இந்த மூன்று வகையும் வாதத்தைக் கெடுக்கும். துவர்ப்பு, கசப்பு, மதுரம். இந்த மூன்று வகை ரசங்களும் பித்தத்தைக் கெடுக்கும். துவர்ப்பு, கசப்பு, காரம் இவை மூன்றும் சேத்துமத்தைக் கெடுக்கும்.

ஆரோக்கிய ரசம் மதுரமான ரசங்களைப் புசிக்கிறது. பாகு வெண்ணெய், புளிப்பு இவைகளைக்.

கட்டிக் கொள்கிறது. இதற்குப் பிறகு இந்த
மூன்று வகை ரோகங்களுக்குள்ளே எதாகிலும்
அறிந்து தனக்குத்தக்க இச்சையான ரசம்,
தன்னுடைய வயிற்றிற்கான ரசம் புசிக்கவ்.
மதுரம் சாரம் அன்னிற்கு. இதுவும் தாகந்
நிவர்த்திக்கும். புளிரசம் வாய்வை கீழ்க்கு
தாங்கும். இருதய(இதயம்)த்திற்கு இதுவா-
ங்கும். தீபனமுண்டாயாருக்கும். காரங்கள்
ஆரோக்கியம் பண்ணும்.

லவணம் சோதிக்கும், பசி உண்டு பண்ணும்.
இது கிளர்ச்சியுண்டாக்கும். கார ரசங்கள்
மூளை பலங்களைக் கட்டி வீங்கியிருந்தாலும்
விடுவிக்கும். தீபனமுண்டாக்கும்.

கசப்பு வயிற்றுக்கு. வயிற்றுக்கு
இரணகாரி. சீதத்திற்கும், தாகத்திற்கும்
நல்லது. பேதிகாரித வருபவற்றை மந்திக்கும்.
மலத்தைக் கட்டும். சுரம் வரும்.

இனி மூலிகை வகை கோவை

எண்ணை படி-4 வெட்டித் தாமரை மரை
புத்தது விராகனெடை-2. இலாமிச்சம் வேர்-
விராகனெடை-2, கற்பூரம்-விராகனெடை-2,
தேவதாரம்-விராகனெடை-2, கோஷ்டம்-
விராகனெடை 2,

7.4.86

திக்கோலம் - விராகனிடை - 1, மஞ்சட்டி - 1, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, ஏலம், நாககேசரம், நன்னாரிவேர், அதிமதுரம், நெய்தல்க்கிழங்கு, தாணிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், ஜாதிபத்திரி, செண்பகமொட்டு, கோரோசனை, சடாமஞ்சி, முந்திரிகைப் பழம், மஞ்சள் - வகைக்கு விராகனிடை - 1.

இவைகளை அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து தலைக்கிட்டு, மூக்கில்விட்டு, காதில்விடவும்.

தீரும் வியாதி: தலைநோய், கண்நோய், மூக்கின் வியாதிகள், பைத்தியம், பீனிசம், சர்வமான தலைநோயும் தீரும்.

40. சுகஜ கிரந்திக்கு சிவனார் வேம்புத் தைலம். ✓

சிவனார் வேம்பு சிறுக நறுக்கி மூடாவிட்டு பூப்படத் தைலம் வாங்கிச் சரிதேன்விட்டு திப்பிலி பலம் - 1, வாய்விளங்கம் பலம் - $\frac{1}{2}$. கொத்தமல்லி - பலம் - $\frac{1}{2}$.

இவைகளைப் பொடியாக்கிக் காசிடைத் தைலத்தில் குழப்பிக் காலையில் சாப்பிடவும்.

இவ்வாறு ஒரு மண்டலஞ் கொள்ள கிரந்தி பட்டதெல்லாம் தீரும்.

41. **குக்குலாதித் தைலம்.**

முற்றிய வேப்பம்பட்டை, சீந்தித்தண்டு, ஆடாதொடை, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, இவை வகைக்கு பலம்-5. இடட்டி-வள்ளத் தண்ணீர் விட்டு நான்காகக் காய்ச்சி, ஏழுநாள் காய்ந்த, எட்டாம் நாள் வடிக்கவும்.

இதில் ஒரு படி நெய் விட்டு, வாய்விளங்கம், அக்கலாக்காரம், தேவதாரம், கைசதிப்பிலி, எவச்சாரம், சவுக்காரம், சுக்கு, மஞ்சள், மரமஞ்சள், சதகுப்பை, கோஷ்டம், அதிமதுரம், வாளவிரை, வெட்பால விரை, மிளகு, ஏலம், கொடிவேலிவேர், கடுகுரோகணி, சடாமாஞ்சி, திப்பிலிமூலம், மஞ்சட்டி, சாதிக்காய், அதிவிடையம். இவை ஒவ்வொன்றும் ஒரு பலம் எடுத்துப் பொடி பண்ணி, நெய்யும் கஷாயமும் காய்ச்சி சூரணத்தைத் தூவி, சுத்தி செய்த குக்குலம் பலம்-5 இதுவும் சூரணம் செய்து தூவி தைலப் பதத்தில் வடித்து இந்தக் கிருதத்தின் பொறை வயாதிக்குக் கொடுக்கவும்.

42. அச்சநிக் தைலம்.

எருக்கு சமூலமும், அமுக்கிரா வேர், பெராமுட்டி,
நீர்வள்ளிக் கிழங்கு வகைக்கு - பலம்.
தண்ணீர் - வள்ளம் - 4. எட்டொன்றாய்க் காய்ச்சி
இறுத்தி, நல்லெண்ணை படி-3. அதிமதுரம்,
கடுக்ரோகணி, சந்தனம், மஞ்சட்டி, நாகப்பூ,
தக்கோலம், சாதிச்சீரகம், எலுமிச்சம் வேர்,
தேவதாரம், வாய்விளங்கம், மனைமஞ்சிக்-
கிழங்கு,

இவையெல்லாம் சமனாய் சூரணம் செய்து
தயிர்த் தண்ணீர் கலந்து சீகாதேவிச்சாறு
கரந்தைச் சாறு - படி-2, கூடக் கலந்து
காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து மேலுக்கு-
இட்டு உள்ளுக்கும் கொள்ளவும்.

தீரும் வியாதி:- முறைக் காய்ச்சல், விஷசுரம்,
சீதச் சுரம் விடும். நாளுக்கு நாள் பலனுண்டாம்.

43. வெண்டுகடிக்குத் தைலம்.

செம்புளிச்சம் பட்டை, நஞ்சறுண்டான் பட்டை,
கார இண்டம் பட்டை, பேய்ப்பீர்க்கம் விரை,
எட்டி விரை, பேய்ச் சுரை, விளாம் பட்டை,
குன்றுமணி, இலுப்பை பட்டை, சிறுவிட்டன்.
பட்டை, எ. அவரை வேர், சிறுகுறிஞ்சா விரை
புரங்கை வேர், கணு ஆவகை வேர்,

கிளிமூக்குக் கிழங்கு, நேர்வாளம், எருக்கம்வேர், பிரண்டை வேர், நிலவாகத்தி, கீழ்தோண்டி. இவைகளை மிடாவில் போட்டுத் தைலம் இறக்கித் தடவவும்.

தீரும் வியாதி:- வண்டுகடி சகலமுந்தீரும்.

44. கற்பூர வள்ளித் தைலம்.

கற்பூர வள்ளிச் சாறு, சங்கங்குப்பி, நீர்முள்ளி, சங்கு, யீருள்ளி, இருசிவகை, இவை ஒன்றாக்கி சாறு படி-1. ஆட்டுக் கோமயம், கழுதைப் பால், பசுவின் கோமயம், இவை படி-1. விளக்கெண்ணை படி-2. எல்லாம் வார்த்து புளியாரை, சித்திரமூலம், நன்னாரி வேர், வெள்ளறுகு, நத்தைக்களி, அவரைக் கிழங்கு, ஆகாசக் கருடன் கிழங்கு. இவை யெல்லாவற்றையு மிடித்து பாலில் கரைத்து எரித்துப் பதத்தில் வடித்து உள்ளுங் கொண்டு மேலுந் தடவவும்.

தீரும் வியாதி: ஒன்பது சோகை, கீரிப்புழு, ரத்த பித்தம், காமாலை, பாண்டு ரோகம், மிடத்து வீக்கம், கோதரம் இவை எல்லாந் தீரும்.

45. வாத சன்னி, கை, கால் முடக்கம், வாத காலாந்தகத் தைலம்.

நொச்சியிலைச் சாறு, புளியிலைச் சாறு, எருக்கம் பால், காடி, வெள்ளாட்டுப் பால், நல்லெண்ணெய். இவை சேரத் தனி ஒன்றுக்கு ஒவ்வொருபடி
வெள்ளைவெங்காயம் பலம் -1½ அரைத்துக் கலந்து காய்ச்சி மெழுகு பக்குவத்திலே வடித்துப் பூசவும்.

தீரும் வியாதிகள்:- குழந்தைகள் மாந்தவலிப்பு, எண்பது வாத சன்னிகள் இவையெல்லாம் தீரும்.

[illegible]

46. சன்னி நாயகத் தைலம்.

வேப்பெண்ணெய் படி -½, வெள்ளாட்டுப் பால் படி -½, வேலிப்பருத்திச் சாறு படி -½, புளிப் பிசைந்த இலுப்பு படி -½, இவையெல்லாம் கூட்டி எரித்து வடித்து மேலுக்குப் பிடிப்பக்கச் சகல சன்னியுந் தீரும்.

47. பூநாகத் தைலம்.

மண்ணுக்குள்ளிருக்கின்ற நாகப்பாம்பு, ரசம், வெண்காரம், வேப்பம் பருப்பு, சாம்பிராணி, மஞ்சள் இவை சமனாய்

எடுத்து உலர்த்தி இடித்து சூரணஞ் செய்து
இரண்டு பாகம் எலுமிச்சம் பழச்சாறு,
சிவன்றெண்ணை கூட்டிக் காய்ச்சிப் பதத்தில்
வடித்து மேலெங்கும் நனைக்க வேண்டும்.
தீரும் வியாதி: சன்னி, பாதம் பாண்டு தீரும்.

48. ஆமணக்குத் தைலம்.

ஆமணக்கம் வேர் - பலம்-10, கண்டங்கத்-
திரி - பலம்-10, சதகுப்பை - பலம்-10, தெலுங்கின்
மனுப்பால் - பலம் -10, அரத்தை - பலம்-10, இந்துப்பு-
பலம்-10.

இதுவைத்து இரண்டு வெள்ளத் தண்ணீர்
விட்டு கண்டு படியாய்க் காய்ச்சி இதனை
வடித்துக் கொண்டு ஒரு படி நல்லெண்ணெய்,
ஒரு படி வெள்ளாட்டுப் பால், கையாந்தகரைச்
-யினைப் பொடி, கருப்பு, சுக்கு, ஏரொண்டு
விராகனிடை - 5 கூட்டிச் சூரணஞ் செய்து
இதனை வடி கொண்டுத் தயிலத்தில் கூட்டி
மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்துப் பக்குவந்
தேய்த்து, அது தின் நாசிக்கு விட்டால்
சிரசிலுண்டான ரோகங்கள், தலைநோவு,
ரோமம் உதிர்வது, அசைகின்ற பல் மத்திடப்-
படும், கெருட திவ்விய புண்டடம்புக்கு
பலமுண்டாம்.

—

49. சகல வங்கிணைக்குத் தைலம்.

கைவரி பாஷாணக் கொட்டை, பாச்சுலுனம்,
பேய்க்கருப்பஞ்சாறு, உள்ளி, வசம்பு,
பெருங்காயம். இவை சேர அரைத்துக்
கிழப்பி, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய்
இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய், கூட்டிக்
கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்து திட்டிடை
உள்ளுக் கொண்டு உடம்புக்கு மிட்டுத்
தலையிலு மிடவும்.
தீரும் நோய்! நாட்பட்ட வங்கிணைகள்
சகல வங்கிணையுந் தீரும்.

50. வாத சிரோமணித் தைலம்.

இலைக்கள்ளி மரம். ~~சிறுக~~ சிறுக சிறுக
நறுக்கி, ஒருநாள் வெயிலில் போட்டு மறுநாள்
புடத்தைலம் வாங்கவும். ஆவீரை வேரும்
வெட்டி அதே பிரகாரந் தைலம் வாங்கவும்.
வகைக்கு ஒரு விராகனிடைத் தைலம்
ஏகித்து பால்விட்டுச் சேர்த்து ஒரு குண்டி-
யில் வைத்துப் பிசிர்வாங்கமு மிட்டு உஞ்-
~~ணத்தைலம்~~ கையில் பிடிக்கவும். மிடாவிற்
தண்ணீர்த் தண்ணீர்ப்பி, வேலிப்பருத்தி, இப்பைவேர்
அழுக்கிலா, தழுதாழை, சித்திசாரணை
சிறுதும்பை, விஷ்ணு, ஆடுதீண்டாப்பாளை
இவை வகைக்கு -1 சேர்த்தனை யடித்துக்

காய்கின்ற தண்ணீரில் போட்டு ஆறவிட்டு
ஊற்றிக் (வாத்துக்) கொள்ளவும். வாதசன்னிக்கு
உள்ளுக்கு (கொடுக்கவும்) நக்கவும். எருமைப்-
பாலில்லாமல் இரண்டு தைலமும் சேர்த்து
உள்ளுக்கு வாங்கவும்.
தீரும் வியாதி:- வாதம் -80, சன்னி -13,
சிரங்கு, படர்தாமரை, இவ்வளவும் தீரும்.

51. வாத பித்த சிலேற்பனத்துக் கெல்லாம்
மிருகாங்கத் தைலம்.

நல்லெண்ணெய் - படி -2, நெய்படி -1, பொன்-
னாங்காணிச் சாறு படி -1/4, அல்லிக்கிழங்குச்-
சாறு - படி -1/4, எலுமிச்சம் பழச்சாறு - படி -1/4,
சந்தனம் - எலுமிச்சங்காயளவு, நெல்லிக்-
காய்ச்சாறு - படி - 1/4, கண்வள மிளகு - படி -1/4,
நன்னாரி வேர் அரைத்து எலுமிச்சங்காயளவு,
கையாந்தகரைச் சாறு படி -1/4, பசுவின்பால்-
படி -1/4. கஸ்த்தூரி மஞ்சள் - பலம் -1/2

இவை எல்லாவற்றையும் ஒரு தாளியில்
வார்த்து, இருப்பு அகப்பை கொண்டு துளாவி
முன்னை விறகினாலும், ஆவாரம் விறகினா-
லும் எரியவிட்டு கடுகிளகு பதமானது பார்த்து
இறக்கி, பிள்ளையார் வைத்து தூபதீபங்
கொடுத்து காணிக்கை வைத்து எண்ணெய்
வடித்து முழுகவும்.

தீரும் வியாதி: வாதபித்த சிலேற்பனம் தீரும்.

52. சித்திரா மூட்டித் தைலம்

சித்திர மூட்டிச்சமூலம் - பலம் - 32, கொண்டு
வந்து நறுக்கி இடித்து ஒரு பானையிலிட்டு
ஒரு பதினாறு படித் தண்ணீர் விட்டு அரை
படியாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு,
புங்கெண்ணை, விளக்கெண்ணை, நல்-
லெண்ணை, கடுகெண்ணை, வேப்பெண்-
ணை, வகைக்கு முக்கால் படி கூட்டி,
பசுவின்பால் படி-4, எலுமிச்சஞ்சாறு படி-1,
ஏலம், லவங்கம், அதிமதுரம், கோஷ்டம்,
சந்தனம், செவ்வள்ளிக் கொடி, தேவதாரம்,
சதகுப்பை, அரத்தை, உகைநீறு, திப்பிலி,
கடுகுரோகணி, மரமஞ்சள், வாய்விளங்கம்,
பெருங்காயம், கஸ்தூரி மஞ்சள், செண்பகப்பூ,
சுக்கு, மிளகு, ஒன்றுக்கு வராகனிடை-4
கூட்டிப் பொடி செய்து போட்டு எரித்து கடுகு
மெழுகு பதத்தில் ~~எரித்து~~ வடித்து விநாயகப்-
பூசை செய்து உள்ளுக்கு ஒரு காசளவு
கொடுத்து, மூக்காலும், சுற்றும் விட்டு தலை, உடம்பு,
தேகமெல்லாம் தடவவும்.

தீரும் வியாதி: தீன் காசம், பித்த காசம்,
மண்டை வியாதி, தலையடைப்பு, இத்து வலி,
மூக்கு வாதம், மண்டைக் கூளை, ஒருதலைவலி,
மூக்கு ~~நீ~~ நீரு பாய்ச்சல், கண்ணகூளை, நாய்-

வாதம், காசியடைப்பு, சன்னியடனாங் கெட்டின
வியாதியென்னாந் தீரும். பிள்ளைகள் மாந்தம்
இவை சகலத்திற்குமாம். மும் தீரும்.

53. நருகண்ட சாறும் பத் தைலம்.

இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய், வேப்பெண்ணெய், இருந்தெண்ணெய், நல்லெண்ணெய், ஏதொன்று வகைக்கு, தேன் உரி, வெள்ளாட்டு நெய் உரி, எட்டிப் பழச் சாறு -படி-2, கருவளை வாரியன் -1 கொம்பேரி மூக்கன் -1, அரணை -1, சாரைப்பாம்பு -1 பெருக்குச் செய்யான் - 18, நட்டுவாக்காலி - 40, தேள் - 40, இவை கணைத் துண்டு செய்து எண்ணெயில் போட்டு அட்டுப்பான், திருகுகள்ளிப்பால், சாராயம் கொள்ளுவானர், முத்தெருக்கம்பால், ஊமத்தை, தகராழ, காகையிலை, எருக்கிலை, முடக்கொத்தான், பாச்சான், வேலிப்பருத்தி, கருவேப்பிலை, இவ்வகை இலைச்சாறு ஏதொன்றுக்கு கொடிவேலி, செங்கொட்டை, கோஷ்டம், கருங்காலி, வேளை, வேம்பு, கண்டங்கத்திரி, படுபாகல், உருமுருங்கை, கடுமுருங்கை, உகாய், இருஞ்சா, ஆறை, சிறுகாஞ்சொறி, பாதாளமூலி, வெப்பாலை, மாவிலிங்கம், சீதேவியாக நசுப்கஞ்சீர், திராய் இவ்வை வகைப்பட்டை தரித்து முடித்து வெள்ளுள்ளி

கடுகு, வசம்பு வகையொன்றுக்கு பலம்-4
முடாவி விட்டு பன்ரெண்டு வெள்ளம் நீர்
விட்டுக் காய்ச்சி ஒருவள்ளமாகக் குறுக்
கிவந்து வடித்து முன்னெண்ணையை விட்டு உக்-
காந்தலிலே வைத்து அருங்கொளிக்குக் கொண்டம்,
கோஷ்டம், சுக்கு, மிளகு, திப்பிலி, அரத்தை,
சித்தரத்தை, மஞ்சள், மரமஞ்சள், தேக்கவாறை,
நெர்விசம், நாணாவி, சதகுப்பை, சிறுநாகப்பூம்,
தக்கோலம், பெருநாகப்பூ, வெந்தயம்,
சீவகம், மேதைமரம், சந்தனம், குதம்,
அதிதாரம், கொத்தகம், கெவர், மனோசிலை,
ஏறரன்று விராகனிடை - 18. செங்கொட்டை,
நேர்வாளம், நீர்வெட்டி, வேப்பம் விதை,
நேர்வாளம் ... இவை வகையொன்றுக்கு
தக்சாவிதை. இவை வகையொன்றுக்கு
பலம்-1
பலம்-1. இதெண்டு பொடி பலம்-1 விநாயகப் பூசை செய்து
14 நாள் காய்ச்சி
கடுகு பதத்தில் வடித்து தானிய புடம் - 40 நாள்
பார்த்தெடுத்து, நல்லநாள், நட்சத்திரத்தில்
திதிவாரம் அறிந்து ஒரு காசளவு உள்ளுக்
கொண்டு திரேகம் மாத்திரையும், உச்சந்தலை
தொடுத்து உள்ளங்கால் பாதத்திலங்க-
வளை இட்டுப் பிடிக்கவும்.
<u>தீரும் வியாதி</u>:. வாதமத்திவாதம், சர்வாங்க
வாதம், கைகால் வராமலிருப்பது மாத்திர்

பக்கக்குத்து, உள்க்குத்து, பாரிசவாதம்,
பிறவலிப்பு, மண்டைவலி, முகவாதம்,
வாதச்சன்னி, கண்டச்சன்னி, இசிவு வாய்வு,
சிற்றம்பரச் சன்னி, நாவுகின் நடுக்கம், தடுமாற்-
-றம், உடம்புவலி, நாவு தடுமொற்றம், வீங்கு-
கரப்பான், வாதக் கரப்பான், மகாசன்னி
போன்ற சுகனளெற் ~~தீரு~~ தீரும்

---

54. எருக்கின்ந் தைலம்.

உள் அரத்துக் கைகாணித் தைலம்.

வெருகங்கிழங்கு - பலம் - 28, தென்னமட்டை-
பலம் - 25 இவை இரண்டும் துவைத்து
படிக்குக் காடியன்ப் போட்டு நாநாழியாகக்
காய்ச்சி இறுத்துக் ~~கொள்~~ கொண்டு
இதில் கற்கம். எண்ணெய் - 2 படி, அரக்கு-
பலம் - 5. தூளாயமிட்டுக் கூட்டவும்,
பசுவின் பால் - 1 குறுணி விட்டு இதுக்குக்
கற்கம். அரத்தை, கோஷ்டம், கடுகு-
ரோகணி. ஏலம், லவங்கம், லவங்கப்-
பத்திரி, நாககேசரம், வெட்டிவேர் இவை
ஒவ்வொன்றுக்கு பலம் - 1 அரைத்துக் கரைத்து
வடித்து தாணிய புடம் ராசியின் மேல் இறக்கி
கஸ்தூரி, கற்பூரம், குங்குமப்பூ, சந்தனம்,
இது தைலத்தின் கலந்து தலையின், உடம்பின்

8.4.86.

தடவவும். சிறு பிள்ளைக்கு, கிழவனுக்கு, கர்ப்பிணியாய் இருக்கிறவளுக்கு சுரடம் குணமாம்.

55. எலிகடிக்கு அரிதாரத் தைலம்.

பசுமஞ்சள் சாறு, அவரி இலைச் சாறு, இஞ்சி இலைச் சாறு, ஊமத்தை யிலைச் சாறு, துளசி யிலைச் சாறு, பாகல் இலைச் சாறு, இலைக் கள்ளிச் சாறு, சதிர்க்கள்ளிக் கொழுந்து வாட்டிப் பிழிந்த சாறு, எருக்-கிலைச் சாறு, நாய்வேளைச் சாறு, மணத்-தக்காளிச் சாறு, மழவண்ணக் கிழங்குச் சாறு, கையாந்தகரைச் சாறு, வேலிப்பருத்திச் சாறு, வெத்திலைச் சாறு, சுரட்டைச் சாறு, இவை ஏதொன்றுக்கு - 2 குறுணி.
அப்பைக் கிழங்கு, வேலிப்பருத்தி வேர், நாய்-வேளை வேர், வேப்பம் வேர் பட்டை, அழுக்கிரா வேர், நிலவாரை வேர், ஆடு-தின்னாப்பாளை வேர், மிளகரணை வேர், பேய்ப்பீர்க்கம் வேர், நல்ல பீர்க்கம் வேர், அழிஞ்சில் வேர், வெள்ளைக் காக்கணம் வேர், பெருமருந்து வேர், செங்கத்தாரி வேர், காரை வேர், செப்பு நெருஞ்சில் வேர், இவை ஏதொன்றுக்கு கழஞ்சு வேர் அரைத்து முந்தின சாற்றில் கரைத்து இதுக்குக் கற்கம்.

திரிகடுகு, திரிபலை, வெள்ளுள்ளி, ஈ.ர-வெங்காயம், கொந்தளங்காய், இக்குளம், வாலுளுவை, ஏலம், இலவங்கம், தேவ-தாளிக்காய், கடுகுரோகணி, அவுரிவிதை, நாயுருவி விதை, குன்றுமணி, கிரந்திநாயகம்-விதை. இவை ஒன்றுக்கு கழஞ்சு அரைத்துக் கரைத்து எண்ணெய்-1 படி, வெள்ளாட்டுக் கோமியம்-1 படி எண்-ணெயில் விட்டுப் பதத்தில் வடித்துக் காசிடை-கொள்ளவும்

தீரும் வியாதி:- 18 எலிகடியும் தீரும்.

56. வாதத்திற்குத் தைலம்.

முதியார் கூந்தல்வேர் பலம்- 2¼ கொண்டு வந்து பதக்கு நீர்விட்டு அஞ்சாழியாகக் காய்ச்சி வடித்து இதுக்குக் கற்கம்:- தேவதாரம், கோஷ்டம், அக்கு, ஏலம், கச்சோலம், கொடிவேலி-வேர், கிழவ்வந்தம், பெருங்காயம், முருங்கை-கிழங்கு, அதிமதுரம், சதகுப்பை, இலவங்கம். இவை ஒவ்வொன்று கழஞ்சு கொண்டு அரைத்துக்-கரைத்து உ-நாழித் தயிரும் அஞ்-நாழிக் காடியும் கூட்டி எண்ணெய்-3/4 படி விட்டு பதத்தின் வடித்துப் பூச எல்லா வாதமும் தீரும்.

---

57. வாதத்துக்குத் தைலம்.

தூதுவளை வேர், எருக்கம் வேர், சிற்றாம-
ணக்கம் வேர், கண்டங்கத்திரி வேர், மாவிலங்-
கம் வேர், சாரணை, புகாய் வேர், சிறுவழுதுணை,
கொடிவேலி, கொன்றை வேர், செப்புநெருஞ்சி,
முன்னை இவை ஏதொன்று பலம்-1 கொண்டு
புன் முருங்கை, குறுந்தொட்டி, இருந்து கள்ளி,
அமுக்கிரா வேர் ஏதொன்று பலம்-1 தட்டி
இடித்து பலத்துக்கு நாழி நீர் விட்டு 4 கட்டி
நாலிலொன்றாய்க் காய்ச்சி வடித்து இதற்கு
கற்கம் :- கடுகுரோகணி, அகில், வசம்பு,
அக்கு, பெருவாகை, பெருங்குமிழ், தக்கோலம்,
கண்டில் வெண்ணை, கோஷ்டம், பச்சிலை,
இச்சோலம், ஏலம், தேவதாரம். இவை
ஏதொன்று -4 படி அரைத்துக் கரைத்து
எண்ணை- 2 படி வெள்ளாட்டுப்பால் -1 குண்-
விட்டுப் பதத்தில் வடித்துக் கை காசிடை
கொண்டு மேலும் பூசவும்.

தீரும் வியாதி :- எண்பது வாதமுந் தீரும்.

58. சர்வாங்க வாதத் தைலம்.

உளுந்து -பலம்-40, சிற்றாமணக்கு வேர், பெருவாகை-
வேர், பெருங்குமிழ், முன்னை, பாதிரி, உவணை,
நெரிஞ்சி, சிறுவழுதுணை, காவிணை, கண்டங்கத்திரி,

இவை ஒவ்வொன்று பலம்-1 தரித்து இடித்துப்
பலத்துக்கு நாழி நீர்விட்டுப் புகட்டி நாலில்-
ஒன்றாய்க் காய்ச்சி வடித்து இதுக்கு கறுக்கம்
பனைவேர், சீவகம், கார்கோளி, மேதை,
மாமேதை, கோஷ்டம், சுக்கு, மிளகு,
திப்பிலி, அரத்தை, சதகுப்பை, தேவதாரம்,
துவர்ச்சிகை, அசமதாகம், இந்துப்பு, முக்-
-காவலை, சீந்திக்கொடி, அடுக்குவேர்,
குடுதொ பெரிடு கொள் ஒவ்வொன்று பலம்-1
கூட்டி அரையம் நீராவலைத்துக் கரைத்து
எண்ணெய் நாழி, பால்நாழி உர்விட்டு சிறு
கொதி இட்டு -3 நாளைரித்தி, நாலாம் நாள் வடித்துக்-
கொண்டு சர்வாங்கமெங்கும் பூசவும்.
தீரும் வியாதி:- சர்வாங்க வாதமுந் தீரும்.

59. பாரிச வாதத்திற்கு விளை முட்டித்
தைலம்.

எட்டிப்பழம் - குறுணி, நல்லெண்ணெ-5 குணி
விளக்கெண்ணெய்-3, நாடி தாணி, ஆட்டுப்-
பால்-குறுணி, எலுமிச்சம் பழச்சாறு -குறுணி,
கடை மருந்து-குறுணி, வெள்ளைப்பூடு -
பலம்-2, சுக்கு-பலம்-2, மிளகு-பலம்-2,
வசம்பு-பலம்-2, திப்பிலி-பலம் -1, சித்தரத்தை-
பலம், செங்கழுநீர்க் கோஷ்டம் பலம்-2,

பாலிலரைத்துக் கலந்து நாலாம் நாள்க்
கொதியிட்டு வடித்து சர்வாங்க வாதமும்
நனைக்கவும்.
தீரும்வியாதி: பாரிசவாதம், திமிர்வாதம்,
அசதிவாதம். இதுக்கு விஷமுட்டித் தைலம்
என்றும் பெயரும்.

60. வாதம் 84-க்கும் விஷசிந்து தைலம்.
எட்டிப் பழக் கோளம் - பலம் - 100. காடி -
குறுணி, எலுமிச்சம் பழச்சாறு - நாழி
எட்டிக் கொட்டைத் தூள் - 4, சிற்றாமணக் -
கெண்ணெய் - 4, நல்லெண்ணெய் - 4,
வசம்பு - பலம் - 5, வெள்ளைப் பூடு பலம் - 10,
கூட்டி வடித்து சர்வாங்கமும் நனைக்கவும்,
பூசவும். வாதம் 84-ம் போம்.
உள்ளுக்கு சுக்கு, மிளகு, திப்பிலி பொடி செய்து
சிற்றாமணக் கெண்ணெயில் வழங்கவும்.
சர்வாங்க வாதமுந் தீரும்.

61. அசுவகெந்தி பலாசத் தைலம்.
அரக்கெண்ணெய் என்றும் பேர்
அமுக்கிராக் கிழங்கு - பலம் - 100, வெருகங் -
கிழங்கு - பலம் - 50, தண்ணிவிட்டான்
கிழங்கு - பலம் - 20, நன்னாரி வேர் - பலம் - 50,
சீந்தித் தண்டு - பலம் - 50. சிறுமுன்னை பலம் 50.

இடித்து சிறுக நறுக்கி பலத்துக்கு இரண்டு
படித் தண்ணீர் விட்டு கஷாயம் வைத்து
இதுக்கு சரக்கு வகை.- கையாந்தகரைச்-
சாறு -படி-1, ஆடாதொடைச் சாறு படி -1,
நல்லெண்ணை படி -16, கடைச் சரக்கு-
கஷாயம், செஞ்சந்தனம் -பலம் -10, நல்ல
சந்தனம் - பலம்-10, அகில் சந்தனம்-பலம் -10,
வாய் விளங்கம் - பலம் -10, அரத்தை பலம் -10,
மிளகு - பலம் -10, திப்பிலிமூலம் - பலம் -10,
செவியம் - பலம் - 10, வெட்டிவேர் பலம் -5,
இலாமிச்சு - பலம்-5, கண்டு பரங்கி - பலம் -5,
திரிபலை வகை-பலம்-5, மரமஞ்சள்-பலம்-5,
62. செவ்வள்ளிக்கொடி- பலம்-5, இனி இது
கஷாயம் செய்து கூட விடவும். இனி
சூரண வகை, பூலாங்கிழங்கு - பலம் - 2,
செண்பகப்பூ - பலம்- 2, நாகேசரம் -பலம்-2,
சீரகம் -பலம்-2, கடுகுரோகணி, பலம் -2,
கோஷ்டம் - பலம்-3, சாதிக்காய் - பலம் -1,
சாதிபத்திரி -பலம் -1, சன்ன லவங்கப்பட்டை-
பலம் -3, சாத்திர வேதி -பலம் -1, விளாவரிசி-
பலம் -2, வெட்பாலை அரிசி - பலம் - 2,
கடலைஞ்சிப் பட்டை - பலம்-3, கஸூரன்-
பலம்-1, வெந்தையம் - பலம்-5, அரக்கு-
பலம் -100 கொம்பரக்காய் வாங்கி

இடித்து கழுவிப் போட்டு பனிரெண்டு படி தண்ணீர் விட்டு அஷ்ட்ட பாகமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு பால் படி -6 அருகவகை: குஷாய வகையல் எண்ணை இதுசேர நன்றாய் விட்டுக் காய்ச்சி களிப்பதமான போதே சூரணம் போட்டு மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு கொள்ளவும். ஒரு கிரண்டியும் பசுவும் பாலும் கூட்டி கொடுக்கவும். மேலுக்கு நன்றாய்ப் பிடிப்பிக்கவும். அஷ்ட்ட சுரம், மாங்கிஷசுரம், அக்கினி - சுரம், இருமல், காசம், உடம்பு பருக்கும் உஷ்ணம் முதலான ரோகம் மட்டுப்படும்.

62. <u>குடிவ வாதத்திற்கு உள்ள் ஆமணக்கு தைலம்.</u>

சிவனை, புன் முருங்கை, ஊர் முருங்கை, சித்தாமணக்கு, விஷ்ணுகந்தி, நொச்சி, வாதமடக்கி, களைச்சி, முடக்கொத்தான், வேலிப் பருத்தி, இஞ்சி, சாரணை, முக்கூட்டை, பொற்கொன்றை, மாவிலங்கை, கரந்தை, கொடிவேலி, அஞ்சி, சிதிர்கள்ளி, முதியார் கூந்தல், செருப்படி, பெருவாகை, பெருங்குமிள், முன்னை, பாதிரி, வில்வம், கண்டங்கத்திரி

சிறுவழுதிணை, நெருஞ்சி, சித்தமல்லி சமூலம்.
இது ஏழொன்றுக்கு-பலம்-1 ஆக வேறே
கூட்டி இடித்து எட்டு மரக்கால் தண்ணீர்
விட்டு இரண்டு மரக்காலாகக் காய்ச்சி
வடித்து ரெண்டு படி எண்ணையும், கள்ளிப்-
-பால் உரியும் கூட்டி இடித்து எட்டு
மரக்கால் தண்ணீர் விட்டு இரண்டு
மரக்காலாகக் காய்ச்சி வடித்து இரண்டுபடி
எண்ணையும், கள்ளிப்பால் உரியும் கூட்டி
வெள்ளுள்ளி உரித்த பருப்பு இருபலமும்,
வசம்பு, செவியம், சிறுமூலம், அரத்தை,
அக்குப்பை, தேவதாரம், அதிமதுரம், கிராம்பு,
சிறுதேக்கு, வெந்தயம், கருஞ்சீரகம், நர்வாளம்,
அமுக்கிரா, திரிகடுகு, கோஷ்டம், பெருங்காயம்
திருமித்துமி, விளாவரிசி, சீரகம், கடுகுரோகணி,
குளைதண்டை வேர், சாரணைவேர், கொடி-
வேலிவேர், சீந்தி கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள்,
பெருங் கொரட்டைக் கிழங்கு, இது ஏழொன்றுக்கு
கழஞ்சு-2 கூட்டி வெள்ளாட்டுப்பால் விட்டரைத்து
வெள்ளுள்ளியும்-பலம்-அரைத்து இரண்டு படி
தேங்காய்ப்பால் கூட்டி இதுகள் சேர
எண்ணையில் எரியவிட்டு அஞ்சுநாள்
சிறுக்கக் காய்ச்சி ஆறாம்நாள் வடித்து
விநாயக பூசை செய்து நல்ல நாளையில்

மூன்று காசிடை கொள்ள ஆறுவகை
குடல் வாதமும் எட்டுவகை குன்மம், ஆனாகம்
வயிற்றிலுள்ள வியாதியனைத்தும் தீரும்.
இதுகொள்ளும்போது பேய்க்குமட்டி இலையை
மோரில் பிசைந்து வடித்து இடக்கு வாயாலே
எடுத்து வயிறு கழியும். அதன்பின்பு புளிக்கும்.

63. அசுவ கெந்தி பலாக்கித் தைலம்.

நல்ல எண்ணெயபடி கனி-1, வெருகங்-
கிழங்கு பலம்-8, அமுக்கிராங் கிழங்கு
பலம்-8, பலகைப் புன்னாளிப் பட்டை-
பலம்-8, இது நாலுவகையும் இடித்து
பதினாறு படித் தண்ணீர் விட்டு நாலொன்-
றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு காடித்
தண்ணீர்ப் படி-4, அரக்கு பலம்-8, காடியில்
போட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்த
கஷாயமும் இரண்டு வகையும் கூட
எண்ணெய் உடன் விட்டு. இதுக்குக்
கடை மருந்து:- சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம்,
சதகுப்பை, அசமதம், மரமஞ்சள், கோஷ்டம்-
முள்ளிங்கிவேரை, கடுகுரோகணி, அரத்தை,
அதிமதுரம், தெய்வன்னிக் கொடி, ஏலம்,
வெள்ளாமிச்சம், வெருகங் கிழங்கு, அமுக்கி-
ராங் கிழங்கு, தேவதாரம், நல்ல அத்தணம்

வகைக்கு வராகனிடை -1. வாங்கி சீலிச்-
சாத்தின் அரைத்து எண்ணெயைப் போட்டு
கலக்கி பருவங் கண்டு வடித்துத் தேய்க்கவும்.
வெந்நீரில் முழுகவும். இதுக்குத் தீரும்
வியாதி:- நாள்பட்ட சுரம், விடாத சுரம்,
மாந்தச் சுரம், இதுக்குச் சன்ன சுரமுடக்
தீரும். இதுக்கு எண்ணெய் வைக்க விபரம்.

63. கைபீ

காய்ச்சின நீர்க்கண்டன் அரக்குத் தைலம்.

அரக்கு - பலம் -10. வாங்கி முக்குறுணித்
தண்ணீர் வைத்து நாலொன்றாய்க் காய்ச்சி
வடித்துக் கொண்டு ஒரு படி நல்லெண்ணெய்
கூட விட்டு தயிர் தண்ணீர் ஒருபடி கூட
விட்டு மூன்றுநாள் வெயிலிடம் வைத்து
மேல்பொடி, அரத்தை, சதகுப்பை, அசமோதகம்,
அதிமதுரம், கோஷ்டம், மரமஞ்சள், சிறுதேக்கு,
கருங்குரோகணி, பெருங்குரும்பை இதுவெல்லாம்
வகைக்கு வராகனிடை -3 வாங்கி அரைத்து
கலக்கி பதத்தில் காய்ச்சி வடித்து நாலு
நாளைக்கு ஒரு முழுக்கு முழுகவும்.

64. கிராணிக்குத் தாளிம்பாதி வடகம்.

மாதுளம் பிஞ்சு, விளாப் பிஞ்சு, விளாம் பிஞ்சு,
திரிகடுகம், சித்திரமூலம், மனைதாங்கிவேர்,
ஓமம், சீரகம், அதிவிடையம், இடசுப்பாளை-
விதை, இதன் பட்டை, பெருமரப்பட்டை,
தேசாவாரம், திப்பிலிமூலம், நெல்லி வற்றல், இலவங்-
கம், இலவம் பிசின், சாதிக்காய், சாதிப்பத்திரி,
அத்திப்பூ, இராசாணி, ஓமம், புளியம் விதைத்தோல்,
மாங்கொட்டை, கசகசா இவை சமன்
பொன்னிறமாக வறுத்து இடித்து வஸ்திரகாயஞ்-
செய்து தயிர்த் தண்ணீர் விட்டரைத்து
மாதுளங் காயை வளையமாக அறுத்து
விதை நன்றாக வாங்கிப் போட்டு அந்த மருந்தின்
அடைத்து மேலே வில்லையை மூடிச்
சீலை மண் செய்து ஒருக்கிடப் புடம் போட-
-டுச் சீலை வேகம் பார்த்து எடுத்துச் சீலை
வாங்கிப் போட்டு அந்தக் காயோடே
அரைத்து வாளைப்பூச் சாறுவிட்டரைத்து
கழற்சிப் பிரமாணம் ஆக உருண்டை செய்து
வாத பித்த சேற்றுமத்தில் வந்த தென்றறிந்து
தேன் ~~தயிரில்~~ தயிரிற் கொடுக்கவும்
பித்த கிராணி, ரத்தக் கழிச்சல், மூலக்கிராணி
இவை முதலானதுங் குணமாகும்.

9.4.86.

65. மதனகாமேசுர வடகம்.

சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கொங்கழுநீர்க்
கோஷ்டம், பரங்கிப் பட்டை, சீரகம்,
இராசாணி ஓமம், அதிமதுரம், சதகுப்பை,
அதிவிடையம், கசகசா, பூனைக்காலி விரை,
உளுந்து, நீர்முள்ளி விரை, எள்ளு, உளந்தன்-
-விரை, மராட்டிய மொக்கு இதுவெல்லாம்
வகைக்கு வராகனிடை -1, அபினி, வங்-
-கம், முந்திரி வகைப் பழம் இது வராகனிடை-6
கந்தசார் பொடிப் பலம்-1. இவையெல்லாம்-
கூட்டி, இளநீர் விட்டரைத்து ஒரு கருக்கின
தேங்காயைக் கண் திறந்து - உள்ளிருக்கிற
நீரூற்றிப் போட்டு அரைச்ச மருந்தெல்லாம்
அதிலடைச்சு சீலை மண் செய்து எரு-
கடக்கிக் அடக்காய் வைக்கும்.
அப்போது எடுத்துக் கொண்டு தள்ளிப்போட்டு
அரைச்சு சரிசமனாக ஒரு பலம் சக்கரை
கூட்டிக் கலந்து கழச்சிக்காயப் பிரமாணம்
உருண்டை செய்து புதுகலசத்தில்
வைத்துக்கொண்டு உருண்டை மாறு
போட்டுக் கொண்டு வரவும். இசைவார்க்கால்
கூட்டிக் கொண்டு வந்தால் சித்தாந்தம்.

66. மதனகாமேசுர வடகம்.

அப்பிரகச் சிந்தூரம் - பலம் -1, கோஷ்டம், விராலி விதை, சீந்திற் கொடி, வெந்தயம், இலவம் பிசின், நிலக்குமிழ், நிலப்பனைக்கிழங்கு, நெருஞ்சில் விதை, நீர்முள்ளி விதை, வெள்ளை விதை, தண்ணீர் விட்டான் கிழங்கு, பூமிச்சக்கரைக் கிழங்கு, கொடாரு சாரணை, சின்னச் சுடாரு சாரணை, ஊமத்தங்காய் விதை, இலவம் விதை, சிறுகாஞ்சொறி விதை, முருங்கை விதை, நாய்ப்பாக் விதை, புருஷ ரத்தினம், குரோசாணி ஓமம், உளுந்து, எள்ளு, கொத்தமல்லி, அதிமதுரம், சித்தாமுட்டி விதை, பூலாங்கிழங்கு, சாதிக்காய், சாதிபத்திரி, இந்துப்பு, சிறுதேக்கு, கர்க்கடகசிங்கி, கையாந்தகரை விதை, அக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், சிற்றிமூலம், கிராம்பு, பேரீச்சம்பழம், சணப்பு விதை, சிறுநாகப்பூ, நல்ல அபினி, காந்த செந்தூரம், ரச- செந்தூரம், இதுக்குச் சமம், காமப்பூ, மனைப்பூ, மராட்டிப்பூ, கசகசா, சாரைப் பருப்பு இதுக்குச்- சமம். எல்லாச் சமம். இந்தச் சூரணம் இதுக்குச் சக்கரை இரண்டு பங்கு போட்டு தேன் விட்டு மர்த்தித்து இலந்தைக் கொட்டைப் பிரமாணம் வடகம் பண்ணவும் இது ராஜ யோக்கியமானது.

—

67. மகாமதன காமேசுர வடகம்.

வங்கம், அப்பிரகம், காந்தம், கோஷ்டம்,
அந்தணம், சீந்தி, சக்கரை, வாளைக் கிழங்கு,
சணப்பம் விரை, நெருஞ்சிவேர், அசமோதகம்,
கொத்தமல்லி, அதிமதுரம், முசுவாளை, கத்தாளை,
கச்சூரம், சாதிக்காய், சாதிபத்திரி, பூமிச்சக்கரை
நீர்முள்ளி விரை, விதாலி விரை, கிருதகாஞ்சோரி-
விரை, சமுத்திரா சோகி விரை, பூனைக்காலி-
68 விரை, மதுக்காரைக் காயம், மதுக்காரை-
வேர், இலவம் பிசின், தண்ணீர்விட்டான்,
நிலப்பனை, காட்டுப் பூசணி, விறுமதண்டுவேர்,
அமுக்கிராவேர், கடுக்காய், தான்றிக்காய்,
நெல்லிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, சாதுரச-
-தகம், லவங்கம், கசகசா, குரோசாணி, சீரகத்-
-துவயம், செயந்தவணம், காட்டாத்திப்பூ,
பாறமுகம், ரேணுகம், வைத்தியம், கருஞ்சுவிளா-
என்னெப்பெரி, கடனை, குமரிக்காய், சடா-
மாஞ்சி, கோரைக் கிழங்கு, லாமிச்சம் வேர்,
69. முடிவாளம், தாதாரவிரை, துத்தாரம் இது
சமபாகம். இதுக்கெல்லாத்துக்குஞ் சரி
கஞ்சாவை. முந்தின சூரணத்துக்குஞ் சரி சக்கரை
கூட்டி தேங்காயெண்ணெய்ப் புடமாகிலும் போட்டு
குளிகை கிருதகழச்சி மருவொதிக் கட்டவும்.

அல்லது பிட்டுப் பாவனை கட்டி வேக
வைத்து கழிக்கை கட்டி தினம் அந்தி,
விடியற்கு கொள்ள வீரியம் விருத்தி யுண்டு,
நிதப்பு வசியம் · தீபன முண்டாம். சோபை,
பாண்டு, வீக்கம், கிராணி, அதிசாரம், மூத்திர-
70. தோஷம், சோமரோகம், இது வெல்லாம் போம்.
வீரிய விருத்தி யுண்டாம். இது மதன மகா-
மதன காமேசுரம்.

68. சத்தியாதி வடகம்.

அதிசாரம் நிற்கும்

சாதிக்காய், ஊமத்தம் விரை, சுக்கு, அதி-
விடையம், பச்சைகாவி, மாங்கொட்டை
அத்திப்பூ, இவை மருந்து, கஞ்சா. இது
சமம் சீந்திச் சாற்றி லரைத்து கழச்சிப்-
71. பிரமாணம் வடகம் அவுப்பானத்தில்
கொடுத்தால் அதிசாரம் நிற்கும்

69. மூலத்துக்கு காங்கயன் வடகம்.

கடுக்காய்- பலம்-5, நெல்லியம்- பலம்-3,
சித்திரமூலம் - பலம்-4, சுக்கு - பலம்-5,
யவச்சாரம் - பலம்-2, சேங்கொட்டை -
பலம்-8, காரணைக் கிழங்கு-பலம்-8,
இதுவெல்லாம், சேங்கொட்டை தவிர
மற்றதெல்லாம் இடித்து வஸ்திரகாயஞ் செய்து

சேங்கொட்டையை இடித்து முந்தின தூளும் போட்டு வெல்லமுங் கூடப் போட்டு யிடித்து தாணிக்காய் மாத்திரை வடகஞ் செய்து மோரிற்-கொள்ள ஆறுவகை மூலமும் போம்.

70. மகரதம் புணை வடகம்.

நல்ல அபினு, சாதிக்காய், சாதிபத்திரி, சமுத்-திரா சோகி, மதநப்பூ, காமப்பூ, மநாட்டிமெக்கி இது சமனி தேங்காய்க் கொமரியல் வைத்துப் புடம் போட்டுப் பின்பு முருங்கைப்பூ, முருங்-கைப் பிஞ்சு, நெருஞ்சிப்பூ இது பால் வார்த்துப் பிட்டு வைத்து அந்தப் பாலில் ஒரு சாமம் அரைத்து அதன் பின்பு சக்கரை போட்டு தேன்விட்டு மத்திக்க- கழச்சிக்-காய் மருவாதி உருண்டை செய்யவும்.

71. தாணிக்கை வடகம்.

தாணிக்கை பத்திரி பலம்-1, மிளகு-பலம்-1, திப்பிலி மூலம் பலம்-2, செவியம்-பலம்-1, சுக்கு-பலம்-3, லவங்கம்-விராகனிடை-4, ஏலம் -விராகனிடை-4, சிறுநாகப்பூ-விராகனிடை-4, லவங்கப்பட்டை-விராக-னிடை-4, இதுக்கு வெல்லம் மூன்று பங்கு கூட்டி யிடித்துக் கொள்ளு ரசத்தில் கொள்ள பீனிசமும், இன்மமும் தீரும். பாண்டுவுக்குத்

தீயாரில்க் கொடுக்கவும். அந்துக்கு இஞ்சிச்சாற்-
-றில் கொடுக்கவும். அவாச காசத்துக்கு ஆடாயத்-
-திர் கொடுக்கவும்.

72. தாளிசை வடகம்.

தாளிசை பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி,
நாகிணம், ஏலம், திப்பிலி மூலம், லவங்கப்-
பத்திரி, கடுக்காய், தாணிக்காய், நெல்லிவற்றல்
இதுவெல்லாந் தரத்து சமம் சூரணஞ் செய்து
சக்கரை அரிபாகம் போட்டு ஒரு தொட்டைப்
பாக்களவு உண்டை செய்து நிழலுலர்த்திக்
கொள்ள அஷத்தி அரம், ஈளை இருமல்,
அசீரண வாய்வு,
காமாலை, புளித்தேப்பம், உடம்பெரிச்சல்;
மூலக் கடுப்பு, உஷ்ணக்காய்ச்சல்,
எலும்புருக்கி இவையெல்லாந் தீரும். துவரம்-
பருப்பு, மிளகுநீர், பயத்தம்பருப்பு, பசுவின்-
பால் கூட்டவும்.

73. கிராணி கேசரி வடகம்.

ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு, குராசாணி,
அபினி, இலவம்பிசின், அக்காரக்காரம்,
சமுத்திராப் பழம், வெழிச்சைப் பிசின்,
நீர்முள்ளி விதை, திட்டிவிதை, நத்தைச்சூரி-
விதை, ஒவ்வொன்று விராகனிடை - 1

சாதிலிங்கம் விதை விராகனிடை - $\frac{1}{2}$
இதுவெல்லாம் கொட்டைத் தேங்காயிலடைத்து
அந்தவாயுக்கு உளுந்துமாச் சீலை சாற்றி
இருநாளில் பசுவின் பாலிலிட்டு அவரைக்-
காய்ச்சி யெடுத்தரைத்து சுண்டைக்காயளவு
வண்டை செய்து சேர்த்து நீரில் கொடுக்கப்
பதினெட்டுக் கிராணியம் தீரும்.

74. மதன காமேசுர வடகம்.
குராசாணி, ஓமம், திப்பிலி, சீரகம், நீர்முள்ளிவிதை,
விராலிவிதை, சாதிக்காய், சாதிப்பத்திரி,
தாளிசப் பத்திரி, பேரிச்சம் பழம், முந்திரி-
-கைப் பழம், கஞ்சாத்தழை, முருங்கைப்பூ,
முருங்கைப் பிசின், கராம்பு, செண்பகப்பூ,
ஏலம், அதிமதுரம், கோஷ்டம், தவசுக்கீர-
-கம், கற்பூர சிலாசாரம், வெள்ளரி விதை,
நிலப்பனைக் கிழங்கு, இது சமபாகமாய்-
இடித்து, பசுவின் பால் விட்டு மெத்தையா-
யரைத்துத் முற்றின தேங்காய் கொண்டுவந்து
தண்ணியை ஊற்றிப் போட்டு அதிலிந்த
மருந்தடைத்து அரிஞ்சிக் கொம்பு கொண்டு
தம்பியாட்டு செங்கல் பொடியு மண்ணு-
மறைத்து ஒரு சீல் மண் கொடுத்து அதன்மே-
உள்ளங்கை மற்றும் மண்ணைப் பி நிழலில்

வைத்து சைபட மிட்டுத் தீயாமல் வாங்கி
பசுவுப் பாலை விட்டரைத்துப் பாக்குப்-
போலுருட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்
இதுக்கு வீரியம் விருத்தியுண்டாம். சக்கிலத்து
மாமணனாராவது பெண்களோடு யனுபவம்
பண்ணலாம்.

75. மதன காமேசுர சுந்தர வில்வமா லேகியம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், அதிமதுரம்,
அக்கராக்காரம், கோஷ்டம், இரோசாணி,
ஜடம், நாககேசரம், கொத்தமல்லி, கசகசா,
சாமப்பூ, தக்கோலம், நவச்சாரம், பரங்கி,
அசுவகந்தி, நிலப்பனைக் கிழங்கு, கற்பூரம்,
வால்மிளகு, செண்பகப்பூ, சாதிக்காய்,
சாதிபத்திரி, வெளங்கம், விதாலி விதை, மருட்டி-
மொக்கை, பூனைக்காலி விதை, நீர்முள்ளி-
விதை, தாதார் விதை, பூமிசக்கரை, இலவம்-
விதை, சந்தனம், விளாவரிசி, கற்கடக-
சிங்கி, அதிவிடையம், இலவங்கப்பட்டை,
யவாமிச்சம், முடவாளம், கோரைக்-
கிழங்கு, தக்கோலம், திரிபலம், விளங்கம்,
குடசப்பாலை விதை, ஆவாரை விதை, சண்-
பகப்பூ விதை, நாயுருவி விதை, புருஷற்-
றினம், எழுத்துக் கற்பூரம், அரத்தை,

முந்திரிகைப் பழம், முருங்கை விதை, தத்தரம்,
கச்சூரம், நாய்வேளை விதை இது சமன்
எடுத்துச் சூரணஞ் செய்து, தேன், சர்க்கரையுடன்
கழற்சிப் பிரமாணம் உண்டை செய்து
கொள்ளவும். அக்கழிச்சலும் நீக்கப்
பிடிப்படும். தம்பனையுண்டு கிரானி கழிச்சல்
..ருவதுந் தீரும். அபினை கூட்டிக் கொள்ளவும்.

76. மூலக்கிராணிக்கு வடகம்.

மருமத்தை விதை, அபின் மருந்து சரிசமன்
கொண்டு தண்ணீர் விட்டரைத்துப் புளியம்விதை-
மரு......ம் செய்து நிழலுலர்த்தி எருமைத்-
தயிரும் உருண்டையுங் கொள்ளவும்,
பத்தியம்: உப்பு, புளி தவிர்க்கவும்.

77. கின்மத்துக்கு வடகம்.

இருநாள் கையாந்தகரைச் சாற்றில் வரகரிசி-
-யாக ஆக்கி மத்திச்சு இதுக்கு மேல்ப்
போடி, மிளகுப் பொடி - ஒரு சிரங்கை, ஓமம்-
ஒரு சிரங்கை, கருஞ்சீரகம் - நாலு சிரங்கை,
இந்துப்பு - பலம்-8, கடுகுப் பொடி - சிரங்-
கை-4, திப்பிலி - சிரங்கை இரண்டு,
சாரணை வேர்ப்பொடி - நாலு சிரங்கை,

சித்தமூல வேர் பொடி - ஒரு பிடி, கழலைப் பருப்பு-
15. இதுவெல்லாம் நன்றாய்ப் பொடி செய்து
வஸ்த்திரகாயஞ் செய்து, ஆக்கின வரகரிசிச்-
சோற்றில் போட்டு மசிச்சு வடுவடுவாக-
கின்னம் போலே பிடிச்சு நிழலுலர்த்தி ஒரு
79. நாளொன்றுக்கு ஒரு வடகம் சாப்பிடவும்.

78. கெந்தக ரசாயனம்.

கெந்தகம் - பலம் - 6, வாய்விளங்கம் - பலம் - 3
சுக்கு - விராகனிடை - 6, மிளகு - விராகனிடை - 6
திப்பிலி - விராகனிடை - 6, சித்திரமூலம் - பலம் - 1
சிறுதேக்கு - பலம் - 1 இடித்து வஸ்த்திரகாயஞ்-
செய்து சுத்தியான கெந்தகத்தில் கலந்து
அக சரீரமானால் தினமொரு விராகனிடை
அந்தி, விடிந்து கொள்ளவும். கடலை-
சரீரமானால் தினம் இரண்டு விராகனிடை
அந்தி விடிந்து சக்கரையில் கொள்ளவும்.
தீரும் வியாதி! சரீரம் பொன்னிறமாம். ~~பகலி~~
பகலில் நட்சத்திரங் காணலாம், நரைதிரை
மாறும், 48- இட்டம் போம், கிராணி - 6 விதமும்-
போம், மேகம் 20-ம் போம், மூத்திரக் கிருஞ்சும்
இருபதும் போம், சிறுநீர் இரும்பு போல்
வெட்டான் பொன்னிறமாம். மந்தாக்கினி போம்.

நூறு யானைப் பலனுண்டாம், வீரிய
விருத்தியாம், க்ஷயசுவாசத்திற்கும் குணம்
எட்டும் போம், வாதம்-80-ம் போம்.
சந்தவகைப் புண்ணும் போம்.

79. கூஷ்மாண்ட ரசாயனம்.

பெரும் பூசணிக்காய் மேல் தோலைச் சீவிப்
போட்டு சிறுக அரிந்து கொண்டது பலம்-10.
இதை நெய்யில் வறுக்கவும். இதுக்கு திரிகடு,
சீரகம், லவங்கம், லவங்கப் பட்டை, லவங்கப்-
பத்திரி, ஏலம், கொத்தமல்லி, நாகேசுரம், சடா-
மாஞ்சி, வாய்விளங்கம், முத்தக்காசு,
தவக்ஷீரம், அதிமதுரம், கோஷ்டம்
இவை வகைக்கு வராகனெடை-3.
இவை சூரணஞ் செய்து நெய் ஒருபடி
காய்ச்சி இந்தச் சூரணம் போட்டு அதன்பின்பு
வறுத்த பூசணிக்காய் சூரணம் போட்டு
லேகிய பதத்தி லிறக்கி சக்கரை பலம்-8
போட்டு தேன் அரைப்படி வார்த்துக்
கிளறி இறக்கவும். இதிலொரு வராகனெடை
வாங்கவும். இதுக்கு தீரும் வியாதி:- க்ஷயம்,
அஸ்திசுரம், மேகம் இவை தீரும்.

—

80. 11.4.86.

கூஷ்ப் பாண்ட ரசாயனம்.

பூசணிக்காய் விதையும் மேல் தோலும்
போக்கி சிறுக நறுக்கி உலர்த்தி ஒருபடி
பசு நெய் வார்த்துக் கொண்டு ஒரு
சட்டியைக் காய வைத்து ஒரு கரண்டி
நெய் வார்த்து பூசணிப் பழம் சிறிது போட்டு
சிவக்க வறுத்துக் கொட்டிக் கொண்டு,
இப்படி வெழுந்த வற்றல் சகலமும் வறுத்துக்
கொண்டு ஆறவிட்டுப் பொடி செய்து
இதுக்குச் சீனி சக்கரை கூட்டி சுக்கு -
பலம் -1, மிளகு - பலம் -1, ஏலம் - பலம் - 1/2
லவங்கப் பத்திரி - பலம் 1/2, கொத்தமல்லி -
பலம் - 1/2 பொடி செய்து வெல்லம் கூடக்
கலந்து நாளித் தேன் விட்டுக் கலந்து காலமே
முக்கழஞ்சு கொள்ள க்ஷயம், ரோகம்,
உளைமாந்தை பித்த பாண்டு தீரும்.

81. மது.... ஜைக ரசாயனம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், லவங்கப்-
பட்டை, லவங்கப் பத்திரி, ஏலரிசி, ஓமம்
குரோசாணி, சித்திர மூலம், வாய்விளங்கம்,
அரத்தை, கண்டு பாரங்கி, செவ்வியம்,
கருஞ்சீரகம், சீரகம், சடாமாஞ்சி, இலாமிச்சம்,

நன்னாரி வேர், நிலப்பனைக் கிழங்கு, அமுக்கிராக்-
கிழங்கு, திகசடை, கடுக்காய், தான்றிக்காய்,
நெல்லிமொழு, நாககேசரம், வகையொன்றுக்கு
விராகனிடை - 3. இதுக்குப் பறங்கிப்பட்டை
பலம் - 4. கூட்டி இடித்துச் சூரணித்து
செய்த சூரணம் இரண்டு பங்குக்கு
சர்க்கரை ஒன்று கூட்டி தேன், நெய்,
சர்க்கரை மட்டுப் பார்த்து விட்டுக் கிளறிக்
கொள்ள ~~சுசு~~ சர்வ ரோகம் மேகம், உஷ்ண-
சுரம், வாதம், மலபந்தம் இதுகள் போம்.
மனயுயதிராய், செங்கத்தாரி, புலிதடுக்கி,
சங்கம் வேர், சங்கங் குப்பிவேர் இது வகைக்கு
அரைபலம், திவனார் வேம்பு பலம் - 1
போட்டுக் கொள்ளவும். இது மது... ரசா-
யனமென்றும் பேராம்.

௮௨. பறங்கிப் பட்டை ரசாயனம்.

பறங்கிப் பட்டை - சேர் - ௨, வாலுளுவை,
ஆவாரை, பத்சகம், வகைக்கு பலம் - 3.
சுக்கு, செவ்வியம், சிறுதேக்கு, தாளிசப்-
பத்திரி, வெள்ளருகு, லவங்கம், திரிகடுகம்,
லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம்,
கொத்தமல்லி, தேசாவரம், திப்பிலி மூலம், இஞ்சி,
சாதிப் பத்திரி, சீரகம், சாதிக்காய், குமம்,

அசமதாகம், அதிமதுரம், கோஷ்டம், சடா-
மாஞ்சி, நஞ்சண்டான் வேர்ப்பட்டை
சித்திரமூலம், தோக்கி இதுவகைக்கு
விராகனிடை -4. இது சூரணஞ் செய்து
இதுக்குத் தேன் படி -1½, பசுவின் பால்-
படி -6 இதுக்குச் சமம் நெய், சர்க்கரை-
பலம் - 20. இது ரசாயனஞ் செய்யவும்
ஒரு நேரத்து விராகனிடை -4. இப்படி
இரண்டு நேரமும் கூட்டவும்.

83 அசுவகெந்தி பலாட்சித் தைலம்.

அரக்கெண்ணை என்றும் சொல்லலாம்.
சகல வாதத்துக்கும் முழுகலாம்.

அமுக்கிராங் கிழங்கு, வெருகாங் கிழங்கு,
கோரைக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு,
கெருடக் கிழங்கு, நன்னாரி வேர், சீந்தில்-
தண்டு, சிறுமுன்னை வேர், இருந்தொட்டி வேர்,
கொடிவேலி வேர், ஆவாரம் பட்டை, நறு-
நீண்டி வேர், வில்லை வேர், வேங்கை வேர்,
சாங்கம் வேர், சித்திர முட்டி வேர், பேராமுட்டி-
வேர், கீளா நெல்லி வேர், சென்னாவரம் பட்டை-
அறுகின் வேர், கொடுதும்பை வேர், அவரி வேர்,
சிவனார் வேம்பு.

84. மேகம் தீர்க்க ~~[illegible]~~ வல்லாரை எண்ணெய்.

கொட்டை எண்ணெய், வல்லாரை, பசுவின்பால், மொசுமொசுக்கை, செவ்விளநீர்த் தண்ணீர், வில்வத்தழை, பொன்னாங்காணி, கத்தாழை-வேர்ச் சார், ஈ.ந வெங்காயச்சார், கையாந்த-கரைச்சார், எலுமிச்சம் பழச்சார், வாழைப்-பூச்சார், வாழைக்கிழங்குச்சார், தென்னம்-பாளைச் சார், வகைக்குப் படி-1.
சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கராம்பு, தாளிசப்-பத்திரி.

85. மேக சஞ்சீவி எண்ணெய்
சகல மேகத்துக்கு.

கொட்டை எண்ணெய் - படி-1, கிளிமூக்குக் கிழங்கு - பலம்-1, ஈ.ந வெங்காயச் சார் - படி-1/2, சங்கங்குப்பிச் சார் படி-1, கரிசலைச் சார் படி-1, சிண்ணிச் சார் படி-1, ஆவரசம் பட்டைச்சார்-படி-1, சீரகம் துட்டிடை-1½, பறங்கிப்-பட்டை - துட்டிடை-1.

86. அரக்கெண்ணெய் விபரம்.

கொம்பரக்கு, அமுக்கிரா வேர், சிற்றாமுட்டி-வேர் வகைக்கு பலம்-14. பதக்கு நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி வடித்து நல்லெண்ணெயும்

நாநாளி பசுவின் பால், பசுவின் தயிர்த்
தண்ணீர் விட்டு இதில் கூட்டுங் கற்கம்.
அமுக்கிராம் வேர், சிற்றாமுட்டி வேர், சிற்-
றரத்தை, ரேணுகம், கோஷ்டம், முத்தக்காசு,
சந்தனம், மரமஞ்சள், கடுகுரோகணி,
சதகுப்பை, முந்திரிகைப் பழம், பெருங்-
குரும்பை, திப்பிலி மூலம், தேவதாரம், மஞ்சிட்டி,
அதிமதுரம், விளாமிச்சம் வேர், நன்னாரிவேர்,
கிராம்பு, வாய்விளங்கம், சதகுப்பை, தக்-
கோலம், தாமரை வளையம், இலாமிச்சம் வேர்,
சிறு கோரைக் கிழங்கு, ஜடாமாஞ்சி, கடுக்-
காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோஷ்-
டம், சிறுநாகப்பூ, நன்னாரி வேர், ரேணுகம்,
அசமதாகம், கூகைநீறு, கருஞ்சீரகம்,
பூசணி விதை, நெல்லி விதை, சீரகம்,
இவை யோரொன்று -3. அரைத்துக் கரைத்து
வடித்து இதில் தேன் -1, சக்கரை -1 விட்டுக்
தினம் நாலு நாழிகை கொள்ளவும்.
க்ஷயம், காசம், சுவாசம் ஆகியவை தீரும்.

87 (சு) கூன்ப்பாண்ட கிருதம்.

பூசணிக்காய்ச் சாறு, இதின் கிழங்கின் சாறு,
கரும்புச் சாறு, ஆடாதொடைச் சாறு, தண்ணீர்-
விட்டான் கிழங்கின் சாறு, வாழைக் கிழங்கின் -
சாறு

நெருஞ்சிச் சாறு, இளநீர் இவை வகையொன்று
சாறு - 1 படி. பசுவின்நெய் - ௨ படி. ஆட்டுப்-
பால் - ௨ படி கூட விட்டு இதுக்குக் கற்கம்-
முந்திரிகைப் பழம், மாதுளையோடு, பேரீச்சம்-
பழம், கொத்தமல்லி, சீரகம், சந்தனம், அதி-
மதுரம், ஏலம், இலவங்கம், இலவங்க பத்திரி,
முத்தக் காசு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வி-
யம், கொடிவேலி வேர், சுக்கு, சாதிக்காய்,
திராம்பு, சீரகம், அதிமதுரம், வால் மிளகு,
கொத்தமல்லி ஆக வகைக்கு கழஞ்சிடை - 3
சீரகம் - பலம் - ... என்பத்து உஷ்ணத்துக்கும்
தேகம் பூசிக்கிறதுக்கு எண்ணெய்.

88. உஷ்ணத்துக்கு எண்ணெய்.

கத்தாழை வேர், இளநீர், தண்ணீர்,
ஈ.ர வெங்காயச் சாறு, பசுவின் பால்,
கையாந்தகரை, முடக்கொத்தான் சாறு,
கையாந்தகரை, வல்லாரை, மொசு மொசுக்கை,
எலுமிச்சன் பழம், விளக்கெண்ணெய், ஆக
கல்வெத்தழை,
வகைக்கு படி - 1. சிவந்திக்கொடி-
வெந்தயம், மிளகு, ஏலம்,
வேர், நாராயணன் சுள்ளி வேர், முளைக்கொள்ளிஞ்சி-
வேர், சங்கம் வேர், புங்கம் வேர், கொடிவேலி-
வேர், வெலிப்பருத்தி வேர், அவிஞ்சி வேர்,
ஆதண்டை வேர், களச்சி வேர், நொச்சி வேர்,

தாது வன்னை வேர், கண்டங்கத்திரி வேர், முடக்-
கத்தான் வேர், சித்தாமுட்டி வேர், பேராமுட்டி-
வேர், மைப்புடி வேர், தும்பை வேர், நில-
துளசி வேர், நாய்த்துளசி வேர், காட்டுமொச்சை-
வேர், சீந்திக் கொடி வேர், முன்னை வேர்,
91. முசுட்டை வேர், பேய் முசுட்டை வேர், முள்ளி-
வேர் இவை எல்லாம் நாளி எண்ணைக்கு,
வராகனிடை எண்ணெ.. மறைக்கி அரைத்து
குழைத்து காய்ச்சிப் பதத்தில் வடித்து
சர்வாங்கமும் பூசி அழுத்தி அரும் மூணாநாள்
மாறல், நாலாம் நாள் மாறல் தீரும். பல-
முண்டாம். இருமல் போம், வயறு பொருமல்
~~போக்~~ காசம், சுவாச காசம், சயரோகம்
இதெல்லாந் தீரும்.

89. காய்ச்சலுக்குப் பொத்திக்
கஷாயம்.

சீந்திக் கொடி, களிப்பாக்கு, திகடை, கடுக்-
காய், அக்கி, கடுகுரோகணி வகைக்கு
வட்டிடை - 2. தேன்.

90. கத்தாளை எண்ணெய்.

கத்தாளைச் சாறு பசுவின்பால், ஏ.3 வெங்-
-காயச் சாறு, வெள்ளைக்கண்ணை, கொத்த்

சுண்ணி ஆக வகைக்கு படி-1. இதுக்கு
மேல் பொடி - சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம்,
கிராம்பு, கஸ்தூரி, அதிமதுரம், வால்மிளகு,
சீரகம் ஆக வகைக்கு வராகனிடை. ௨

91. மேகச் சந்தனாதித் தைலம்.

வில்வ வேர் - பலம்-100, விளாமிச்சம் வேர்,
வெட்டிவேர் வகைக்கு பலம்-5. இளநீர்,
நல்வெண்ணெய், நொச்சிச் சாறு, கற்றாளை-
வேருச் சாறு, வாழைக் கிழங்குச் சாறு, பொன்-
னாங்கண்ணிச் சாறு, மொசுமொசுக்கைச் சாறு,
தேர் செங்கழுநீர்ச் சாறு, நெல்லிக் காய்ச் சாறு,
ஆல விழுதுச் சாறு, வல்லாரைச் சாறு,
கொத்துமல்லி, வாய்-
வகைக்கு படி-1.
விளங்கம், பூலாங்கிழங்கு, நாககணம்,
கோடகச் சாந்து, ஏலம், ~~கிருஷ்ணப்பூ~~,
சிறுநாகப்பூ, பச்சிலை, மரிக்கொழுந்து,
குரம், சோம்பு, கிளியூறப் பட்டை, கிராம்பு,
வால்மிளகு, வாய்விளங்கம், லவங்கப்-
பட்டை, லவங்கப் பத்திரி, திப்பிலி மூலம்,
னாகேசரம், மலைதாங்கி, கோடப்பாலைப்-
பட்டை, கோரைக் கிழங்கு, தேவதாரம்,

சந்தனம், அகில்க்கட்டை, மரமஞ்சள்
செவியம் வகைக்கு துட்டிடை - 2.

92. அரக்குத் தைலம்.

அதிமதுரம், செவியம், கோஷ்டம், அகில்க்-
கட்டை, கடுகுரோகணி, மஞ்சிஷ்டி,
வெம்பாளம்பட்டை வகைக்கு பலம் - 4.
தண்ணீர் படி - 28. இதுகஷாயம் வைத்து
எட்டிலே ஒரு பங்கு காய்ச்சின தண்ணீர்
படி - 3 1/2 கொம்பரக்கு - பலம் - 14.
தண்ணீர் படி - 14, 1/4 படியாகக் காய்ச்சி
நல்லெண்ணெய் படி - 1, மோர் படி - 1, பால்
படி - 1, பாவட்டை யிலைச்சார், முடக்கத்தான்,
கையாந்தகரை, நொச்சி, நாத்தொட்டி
வகைக்கு படி - 1 சாதிக்காய், சாதிபத்திரி,
ஏலம், கிராம்பு, இருநாகப்பூ, வால்மிளகு,
நாற்கோலம், செஞ்சந்தனம், கொத்தமல்லி,
வாய்விளங்கம், தகரம், சோம்பு, லவங்கப்-
பட்டை, லவங்கப் பத்திரி, சடாமாஞ்சி, தேவ-
தாரம், சந்தனம், கிளியூறற்பட்டை, வெட்டி-
-வேர் வகைக்கு துட்டிடை - 2.

93. மண்டைப் பீனிசத்துக்கு
மூக்கில் நசியமிட நெய்

திப்பிலி, கஸ்தூரி, கோரோசனம், அக்கி, மிளகு, வகைக்கு வராகனெடை-1 இது எல்லாம் வஸ்திரகாயம் செய்து பசுநெய்யில் சேர்த்துக் கொண்டு நாசியில் நசியம் விட்டு உச்சந் தலையில் தேய்க்கப் பீனிசம் தீரும்.

94. வெகுமூத்திரத்துக்கு எண்ணெய்

நல்லெண்ணை - படி-4. நன்றாய்க் காய்ச்சி சீரகம்-படி-1, ஏலம் படி-1, ஆவாரம் விதை-படி-1, இது மூன்றும் தூள் பொடி செய்து அந்த எண்ணெயில்ப் போட்டு 'து'ளாக் காய்ச்சி ஆறிய பிறகு உள்ளுக்கு நிரம்பின எண்ணை கொள்ளவும். எண்ணை நாளும் நாளும் என்றாலப் படும். கரப்புட் புளித்த விலும் வெகுமூத்திரம் நிற்கும்.

95. அதன்வல வாயாதி எண்ணை.

வெள்ளைச் சீயம், சீந்தில் தண்டு, உவைமும், குருந்தொட்டி வேர் ஒவ்வொன்று பலம்-1

பலத்துக்கு நாளி நீர்விட்டுக் காய்ச்சி நா-
லொன்றாய் வடித்து அமுக்கிரா வேர், இருந்-
தொட்டி வேர், அரத்தை, கடுகு, அதிமதுரம்,
ஏலம், மஞ்சிட்டி, தேவதாரம், சுக்கு, கைச்சோலம்,
தகரம், அகில்ச் சந்தனம், இலவங்கம், பச்சிலை,
நாகப்பூ, கற்பூரம், புனுகு, இவை கூட்டி
எண்ணெய் நாளி கூட்டி அரைத்து கரைத்துப்
பதத்தில் வடித்துத் தேய்க்கவும்.

இதுக்குத் தீரும் வியாதி :- சிரரோகம், கண்ணில்
வியாதிகள் மற்றும் பல பல வியாதியுந் தீரும்.

இக்கணைப் பாதை, மொழிகளை சரிபார்த்து, புத்தகமென்
ஒப்புதலுடன் அச்சுக்கு வழங்கலாம்

[signature]

3/3/98

திரு ~ அ நூலவர்